# மல்லிகை!

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



நவம்பர்
விலை 1/-

அக்டோபர் சோஷலிஸ மகாபுரட்சி
67 வது ஆண்டு ஞாபகார்த்த இதழ்

மணிப்புரி சேலைகள்
நூல் சேலைகள்
வோயில் சேலைகள்

சேட்டிங் - சூட்டிங்
வகைகள்

சிறுவர்களுக்கான
சிங்கப்பூர் றெடிமேட்
உடைகளை

தெரிவு செய்வதற்குச்
சிறந்த இடம்

# லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்

18. நவீன சந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7684

*

"ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில் - உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் - பிறர்
ஈனநிலை கண்டு துள்ளுவார்"

**138** பதினைந்தாவது ஆண்டு

'Mallikai' Progressive Monthly Magazine

நவம்பர் 79

மல்லிகை

முகவரி:
ஆசிரியர் டொமினிக் ஜீவா
234B- கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
இலங்கை.

MALLIKAI
Editor: Dominic Jeeva
234B, K. K. S. Road,
JAFFNA.
Sri Lanka

மல்லிகையில் வெளி
யாகும் கதைகள், கவி
களில்வரும் பெயர்கள்
நிகழ்ச்சிகள் யாவும்
கற்பனையே
சிந்தனை, கருத்து
எல்லாம் ஆக்கியோர்
தனித்துவம்
பொறுப்பும் அவரே

அடுத்த இதழ் குழந்தைகள் மலராக மலர இருக்கின்றது. குழந்தைகள் சம்பந்தமான தகவல்கள் உடனடியாக வேண்டப்படுகின்றன.

சென்ற இதழ் இந்தியப் பிரயாணத்தால் பிந்திவந்தது. அதன் காரணமாகவே இந்த இதழும் தாமதித்து விட்டது. ஜனவரியில் இருந்து இந்தத் தாமதம் சரிக்கட்டப்பட்டு விடும்.

ஜனவரி 80-ல் இருந்து மல்லிகை இதழின் விலை ரூபா 1-25 ஆகக் கூட்டப்பட்டுள்ளதை இலக்கிய நண்பர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். தவிர்க்க முடியாத இந்த விலை உயர்வை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

புதிய ஆண்டில் இருந்து பல புதிய அம்சங்களை மல்லிகையில் சேர்க்கலாம் என்பது நமது எண்ணம். புதிய அம்சங்கள் எவைகளைச் சேர்த்தால் இன்னும் சுவையாக இருக்கும் என்பதைத் தயவு செய்து ஆலோசனையாக எழுதுங்கள்.

**ஜனவரி 80** இதழ் பொங்கல் சிறப்பு மலராக மலர இருக்கிறது.

புதிய எழுத்தாளர்களின் படைப்புக்களுக்குத் தகுந்த இடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் பழைய, புதிய என்றில்லாமல் தரமறிந்து வெளியிட்டு வந்துள்ளதை அறிவீர்கள். சமீப காலங்களில் கொஞ்சம் அதிகமாகவே இடம் ஒதுக்கி வந்துள்ளோம். பலர் அரைத்த மாவையே அரைத்து தொடர்ந்துஎழுதுகின்றனர். இது புதியதிற்குரிய வளர்ச்சியல்ல, என்பதை இளம் படைப்பாளிகள் உணர வேண்டும்.

— ஆசிரியர்

# குறிப்புகள்

❉ பிரபலமான தமிழ் எழுத்தாளர்கள் பலரின் சிறுகதைகளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்து 'கெற்றி கதா' என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளது மக்கள் எழுத்தாளர் முன்னணி. இக் கதைகளைச் சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தைச் சேர்ந்த திரு. த. கனகரெத்தினம் அவர்கள்.

❉ இதே போலப் பிரபல சிங்கள எழுத்தாளர்களின் பல சிறுகதைகளைத் தமிழில் மொழி பெயர்த்து 'சேது பந்தனம்' என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டுள்ளனர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர். சிங்களக் கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தவரும் திரு. த. கனகரத்தினம் அவர்களே.

❉ மக்கள் எழுத்தாளர் முன்னணிச் செயலாளரான திரு. குணசேன விதான கடந்த மாதம் ஸ்கூட்டர் விபத்தில் காயப்பட்டுக் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பல சிங்கள — தமிழ் எழுத்தாளர்கள் மருத்துவமனை சென்று அவருக்கு ஆறுதல் சொன்னார்கள்.

❉ எழுத்தாளர் மு. கனகராஜனுடைய சிறுகதைத் தொகுதியொன்று வெகுவிரைவில் வெளிவர இருக்கின்றது. அதன் வெளியீட்டு விழா விரைவில் கொழும்பில் நடைபெற ஆவன செய்யப்படுகின்றது.

❉ அடுத்து வரும் பொங்கல் விழா எழுத்தாளர்களின் இலக்கிய விழாவாக நடைபெறுவதற்கு யாழ்ப்பாணத்தில் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

❉ ஜெயகாந்தன் அவர்களுக்கு சோவியத் நாடு நேரு பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் வரும் ஜனவரி மாதம் அவர் ரஷ்யாவுக்குச் செல்ல இருக்கிறார். அவர் வெளி நாடு போவது இதுதான் முதல் தடவை.

❉ நாடக சம்பந்தமாக திரு. இ. சிவானந்தன் நூல் ஒன்றை எழுதியுள்ளார். அதன் பெயர் 'பல்கலைக் கழகத்தில் நாடக அரங்கம்' என்பது. கூடிய சீக்கிரம் அதன் வெளியீட்டு விழா நடைபெறும்.

❉ 'கல்பனா' மாதம் ஒரு நாவல் வெளியீட்டை வெளியிடும் சென்னை என். சி. பி. எச். நிறுவனத்தினர் அடுத்த ஆண்டு வார இதழ் ஒன்றை வெளியிட உத்தேசித்துள்ளனர்.

❉ 'சிகரம்' ஆசிரியர் தோழர் ச. செந்தில்நாதன் ஜனவரி மாதம் இலங்கைக்கு வருவதாக உத்தேசித்துள்ளார். தான் வருவது சம்பந்தமாக மல்லிகை ஆசிரியருக்குக் கடிதமும் எழுதியுள்ளார்.

❉ திரு. கா. சிவத்தம்பி அவர்களுடைய புதிய நூலொன்று வெளிவந்துள்ளது. 'தனித்தமிழ் இயக்கத்தின் சமூக, அரசியல் பின்னணிகள்' என்பது அதன் பெயராகும்.

மல்லிகை

## யுக மாற்றத்திற்கான தொடக்கவுரை

அந்த யுகப் புரட்சி நடந்து அறுபத்திரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

உலகம் தோன்றியதில் இருந்து இன்றுவரை பாரெங்கும் எத்தனை எத்தனையோ புரட்சிகள், மாற்றங்கள், திசை திருப்பும் இயக்கங்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஆனால் பழைய ரஷ்யாவில் நடைபெற்ற ஒக்டோபர் புரட்சியைப் போல, மனுக் குலத்தின் தலைவிதியையே மாற்றியமைக்கும் புரட்சி போல கவிஞன் கண்ட யுகப்புரட்சி வேறு நடைபெறவில்லை!

இந்தப் புரட்சியின் ஊடாக உலகில் உழைக்கும் மக்களின் முதலாவது அரசாகிய சோவியத் ரஷ்யா பிறந்தது!

எதிர் கால நம்பிக்கையற்று, விரக்தியுற்று, என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்துப் போயிருந்த உழைக்கும் மக்கள் பெருங் கூட்டத்தின் நம்பிக்கைச் சுடரொளியாக — விடி காலை நட்சத்திரமாக — சோவியத் யூனியன் உருவாகத் தொடங்கியது.

இந்த அறுபத்திரண்டு ஆண்டுகளுக்கிடையே மிகப் பெரிய கொடூரமான உலக யுத்தத்திற்குச் சோவியத் நாடு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நாடு தனது உள்நாட்டுச், சர்வ தேசக் கடமைகளில் பொறுப்பாக நின்று நாஜி ஹிட்லரின் அதிரடித் தாக்குதல்களில் இருந்து தனது மண்ணையும், மற்றும் ஏனைய நாடுகளையும் விடுவிப்பதில் முன்னணியில் திகழ்ந்தது.

சோவியத் யூனியன் உருவாகுவதற்கு முன்னர், வலுவுள்ள நாடுகள் — அதாவது ஏகாதிபத்திய நாடுகள் — பலவீனமான நாடுகளுக்கு ஆணைகள் பிறப்பித்தன. முடிந்தால் அந்த நாடுகளின் ஆட்சியமைப்பையே தூக்கியெறிந்து, தமது பொம்மைகளைச் சிம்மாசனம் ஏற்றி வைத்து, தமது சுரண்டலைத் தங்கு தடையின்றி நடத்தி வந்தன,

1956-ல் எண்ணெய்க் கம்பெனிகளைத் தேசிய மயமாக்கிய ஈரானியப் பிரதமர் மொஸாதிக்கைப் பதவி கவிழ்க்கச் செய்து அவரைச் சிறையில் இட்டு மகிழ்ந்தது, ஏகாதிபத்திய அமெரிக்கா.

இன்று—

இன்று அதே அமெரிக்கா அதே ஈரானின் நடவடிக்கைகளைக் கண்டு அலறித் துடிக்கிறது.

சிறு சிறு நாடுகள் கூடத் தமது தேசிய சுதந்திரத்தைப் பாது காக்க வைத்ததும், தமது தேசிய சுய மரியாதையையும் காக்கக் கூடிய வல்லமையைத் தந்ததும், இந்தச் சோவியத் புரட்சி தான் என்பதை இன்று சகலரும் அறிவார்கள்.

புரட்சி நடந்து ஐம்பது ஆண்டுகளுக்குள் விஞ்ஞான சாதனை யாக அண்ட வெளியில் முதல் மனிதனை ககாரினை அனுப்பி விஞ்ஞான அறிவுச் சாதனையையும் செய்து காட்டியது, சோவியத் ரஷ்யா.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பின் தள்ளப்பட்ட, உரிமை கள் மறுக்கப்பட்ட சகல நாடுகளும், சகல இனத்தவர்களும் இன்று தமது அத்தியந்த நேசனாக — தோழனாக — அநியாயத் தைத் தட்டிக் கேட்க நிமிர்ந்து பலத்தோடு நிற்கும் ஆபத்துச் சகா யனாக சோவியத் யூனியனைக் கருதி நேசம் பாராட்டுகின்றனர் என்பது யதார்த்த நடைமுறை உண்மையாகும்.

இத்தனைக்கும் சோவியத் நாடு வெறும் சவடால் அடிப்ப தில்லை. விதண்டா வாதம் புரிவதில்லை. தத்துவக் கொக்கரிப்புக் கொக்கரிப்பதுமில்லை.

மிக அமைதியாக இருந்து கொண்டே யுகப் புரட்சியின் சர்வ தேசியக் கடமைகளை, உலக உழைப்பாளி மக்களின் நலன் கருதிச் செயலாற்றி வருகின்றது. ஒரு சோஷலிச சமுதாயத்தை இந்த மண்ணில் நிர்மாணித்துவிட வேண்டுமென்பது சுகமான கனவாக அமையலாம்; எழுதும்போது இலட்சியத் தாகமாகவும் கூட அது இருக்கலாம்.

ஆனால் அந்தச் சுவர்க்கக் கனவை இந்த மண்ணில் இறக்கி, மக்கள் மத்தியில் வேர்பரவவைத்து இருந்த சமுதாய அமைப்பை முற்று முழுதாக நொருக்கி, புதிய சமுதாய அமைப்பைத் துளிர் விடச் செய்ததற்கான உயரிய யாகம் இருக்கின்றதே...... அப்பப்பா..... !

அது கற்பனைக்குமெட்டாத மனுக் குலச் சாதனை!

அச் சாதனையைத் தனது மண்ணில் செய்து காட்டியது ரஷ்யத் தொழிலாளி வர்க்கம்.

அந்தச் சாதனையின் ஜீவ கீதந்தான் இன்று உலக உழைப் பாளி வர்க்கத்தின் தாரக மந்திரமாக ஓங்கி ஒலித்துக் கொண்டி ருக்கின்றது.

சிந்தனையாளர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், ஞானிகள் ஆகி யோர் காலாதி காலமாகக் கண்ட வானுலகக் கனவைப் பூமி யில் நனவாக்கி உலவ வைத்தவர் லெனின்.

அந்த மாமனிதனின் தியாக வேள்வியில் பூத்த இந்த யுகப் புரட்சிப் புஷ்பத்தின் 62-வது ஞாபகார்த்தத்தை நாமும் நேச பூர்வமாகக் கொண்டாடுகின்றோம்; மதித்துப் பாராட்டுகின்றோம்;

# நமது குழந்தைகள்

சகல நாடுகளின் குழந்தைகளும் யுத்தக் கொடுமைகளே அனுபவியாதிருப்பதற்கும் குழந்தைப் பராயம் அமைதியும் ஆனந்தமுமாக இருப்பதற்கும் உத்தரவாதமளிப்பது நமது கடமை.

துரதிருஷ்ட வசமாக உலகில் இன்னமும் துப்பாக்கி வேட்டொலி கேட்கிறது, ரத்தம் சிந்தப்படுகிறது, பெரிய வர்கள் மட்டுமல்ல, குழந்தைகளும் கொல்லப்படுகிறார்கள். பட்டினி, பிணி ஆகியவற்றினால் ஏராளமான குழந்தைகள் மரணமடைகிறார்கள். இது சகிக்க முடியாது. சோவியத் யூனியனிலுள்ள நாம் குழந்தைப் பராய ஆண்டுகள் ஆரோக் கியமானதாக ஆனந்தமயமானதாக இருப்பதற்கு எம்மாலா னதனைத்தையும் செய்கிறோம். குழந்தை வளர்ப்பு நிலையங் கள், ஆரம்பப் பள்ளிகள், பள்ளிகள் என்பவை ஆயிரக் கணக்கில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அன்பாக, சிந்தனா பூர்வமாக வாழ்வதற்கும், சகல இன, நிற மக்களுடனும் அண்டையயல் நல்லுறவுகளுடன் வாழ்வதற்கும் பொது நன்மைக்காக உழைப்பதற்குத் தமது அறிவைப் பயன்படுத் தவும் உழைப்பைக் கௌரவிக்கவும் குழந்தைகளுக்கு நாம் போதிக்க முயலுகிறோம்.

லியோனிட் பிரெஷ்நேவ்

(யுனெஸ்கோவுக்கு அனுப்பிய செய்தியில்)

அடுத்த இதழ் குழந்தைகள் இதழாக வெளிவருகின்றது.

## தமிழகத் தபால்

இங்கே, அடிக்கடி உரையாடலின் போது, உங்களைப் பற்றிய பேச்சு எங்களுக்கு முத்தாய்ப்பாக இருக்கும். 'ஒரு கோட்டுக்கு வெளியே' என்ற எனது நாவல் பற்றிக் குறிப்பிடும் போது 'அபாரம்' எனக் கோடிட்டது போலக் கச்சிதமாகப் பாராட்டி எழுதிய தாக நண்பர் சோமு சொன்னார். மல்லிகையில் சிவத்தம்பி அவர்கள் விமர்சனம் எழுதப் போவதான செய்தியையும் அவர் தெரியப்படுத்தினார்.

அமரர் ஜீவானந்தத்திற்குப் பிறகு, இடதுசாரி இலக்கிய வாதிகளின் படைப்பிலக்கிய இலக்கணமாகத் திகழும் உங்களின் 'அபாரம்' என்ற ஒரு சொல்லே, ஆயிரம் விமர்சனங்களுக்குச் சமானம். இதைச் சமீபத்தில் நடந்த ஓர் இலக்கியக் கூட்டத்தில் கூட நான் தெரியப்படுத்தினேன். உங்களின் பாராட்டு என்னை மேற்கொண்டும் பல படைப்புக்களை ஆக்குவதற்கு ஊக்கப்படுத்தும்.

உங்கள் வருகையின் சுப உணர்வுகள் இன்னும் என் மனதில் பசுமையாக உள்ளன. அதிகமான இலக்கியச் சந்திப்புக்கள் இங்கு இல்லை. நண்பர் ரவீந்திரதாஸ் ஒரு கார் விபத்தில் சிக்கி, மயிரிழையில் உயிர் தப்பினார். இப்பொழுது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்.

மல்லிகைக் கேள்வி — பதிலில் என்னைக் கௌரவித்துப் பாராட்டியதைப் படித்துப் பார்த்தேன். இடதுசாரி இலக்கிய வாதிகளில் நீங்கள் எனது ஆதர்ஸ புருஷர் என்றால் அதை நீங்கள் வெறும் முகஸ்துதி எனக் கொள்ளலாகாது. ஒருவேளை நாம் வளர்ந்த முறையும் சமூகத் தாக்கங்களும் இதற்குக் காரணங்களாக இருக்கலாம்.

சென்னை - 90. **சு. சமுத்திரம்**

'மல்லிகை' இதழ்களை சிலோனில் இருந்து வரும் நண்பர்கள் மூலமும் இங்கு கல்லூரியில் படிக்கும் இலங்கை நண்பர்கள் மூலமும் கிடைக்கும் போதெல்லாம் படித்து வருகின்றேன்.

தாங்கள் ஒரு இதழில் எழுதி இருப்பதைப் போல, இங்கு தமிழகத்தில் மல்லிகையின் மணம் கிடைக்காத சூழ்நிலை. கலாசாரத்தாலும் பண்பாட்டாலும் ஒன்று பட்ட ஒரே இன மக்கள் இரு வேறு நாடுகளில் பிளவு படும்போது ஏற்படுகின்ற கட்டாயங்கள் இவை. இங்குள்ள தமிழர்கள் என்றுதான் கண்திறந்து பொங்கியெழப் போகின்றார்களோ? அதுவரை இலக்கிய தாகம் கொண்டோர் தவித்திடத்தான் வேண்டுமா? தமிழகத்தில் நாறும் கழிசடை ஏடுகள் பல்கிப் பெருகி வருகின்றன. அவை ஈழத்திற்கும் படையெடுத்து வருகின்றன. தமிழகத்திலிருந்து வரும் இத்தகைய இதழ்களைத் தடைசெய்து, என்று தமிழகத்தில் ஈழத்து ஏடுகள் கிடைக்கும்படி செய்யப்படுகின்றதோ அன்றுதான் தமிழக ஏடுகள் அங்கே வரலாம் என்ற விதி செய்ய இயலாதோ?

**திருச்சி.** **எஸ். தியாகராஜா**

சிங்களத் திரைப்படமொன்று

# நுவன் ரேனு

அன்பு - ஜவஹர்ஷா

சற்று மாறுதலான. சாதாரண திரைப்படமொன்றுதான் இது.

தார்மீக தூண்டலோ, ஆத்மிகப் பிரச்சாரமோ. சமுதாய மாற்றம் பற்றிய உரத்த சிந்தனைகளோ, புரட்சிகரத் தாக்கமோ வலிந்து புகுத்தப்படாத காதல் கதை என்று கூடச் சொல்லலாம்.

கனவு வாழ்க்கையையும், 'ஒட்டப்பட்ட' காட்சிகளையும் காட்டுகின்ற வாய்ப்பாட்டு படங்களுடனும், சிறு சம்பவத்தையும் பெரிதாகக் காட்டுகின்ற 'கலை'ப் படங்கள் என்று சொல்லப்படுகின்ற படங்களுடனும் இது வித்தியாசமான ஒன்ருக இருக்கின்றபடியால் தமிழ் திரைப்பட ஆர்வலர்களுக்கு இதைப்பற்றிச் சொல்வது தேவை எனப்படுகின்றது.

மொழியைச் சரியாக அறியாமலும் கூட மேற் கூறப்பட்ட தத்துவத் தாக்கங்கள் அற்று ஆங்கில, பிரெஞ்சுப் படங்களை அவைகளின் கலை நுணுக்கங்களுக்காகத் தூக்கிப் பிடிக்கும் சிலர் 'நுவன் ரேனு' போன்ற படங்களுடன் வேறு தரமான சிங்களப் படங்களையும் பார்த்தால் அவர்களின் கலை உணர்வு இன்னும் மேம்படும் எனக் கூடச் சொல்லலாம்.

வசதியான குடும்பத்தின் ஏக வாரிசான நுவன், ரேனு என்ற நர்ஸ் ஒருவளைச் சந்தித்து விருப்பம் கொள்கின்ருன். ரேனு முதலில் ஒருவனல், குழந்தைக்குத் தாயாக்கப்பட்டு கைவிடப்பட்ட ஒருத்தி என்று அவள் கூறிய போது தானே அத்தக் குழந்தைக்குத் தந்தையாக இருப்பேன் என்ற வாக்குறுதியுடன் இருவரும் இணைந்து வாழுகின்றனர். நுவனின் தாய் தனது மகனுக்கு அவளது சகோதரனின் மகளான அமீதாவை திருமணம் செய்து வைப்பதாக வாக்குறுதியளித்து இருக்கின்ருள். நுவனின் விடயம் அவனது தாய்க்குத் தெரிய வரவே ரேனுவிடம் நுவனின் தாய் ரேனுவை நுவனை மறந்து தனது மகனைத் தன்னிடம் விடும்படி கேட்கவே, ரேனு அதற்குச் சம்மதிக்கின்ருள். ரேனுவே திடமாக நுவனிடம் தன்னை மறந்து அமீதாவைத் திருமணம் செய்யும்படி கூறுகின்ருள். நுவனுக்கு இது விருப்பம் இல்லாத ஒன்ருக இருந்தாலும் ரேனு தனது தீர்மானத்தை மாற்ற முடியாது என்று திடமாக நிற்பதால் அமீதாவைத் திருமணம செய்கின்ருன். நுவன் தன்னை கூடியவரை கட்டுப்படுத்தி அமீதாவுடன் சந்தோசமாக வாழ்ந்தாலும் ஒரு சந்தர்ப்பத்தில் ரேனுவின் குழந்தை நுவனை தற்செயலாகக் கண்டு 'அப்பா' என்று அழைத்த போது அவர்கள் வாழ்க்கையில் விரிசல் காணுகின்றது. அமீதா குழந்தை நுவனுடையது என்ற எண்ணத்தில் நுவனும் அவனது தாயாரும் தன்னை ஏமாற்றி விட்டார்கள் என்று கூறி தகப்பன் வீடு செல்லுகின்ருள். அமீதாவின் தந்தையும் நுவனின் தாய் சொன்னது எதையும் கேளாமல்

மல்லிகையின் அபிமானியும் ஈழத்து எழுத்தாளரின் இதயத்து நண்பருமான திரு. ஆ. குருசுவாமி அவர்களின் தாயார் திருமதி **மீனுட்சி அம்மாள்** அவரது சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில் 28-11-79 அன்று காலமானுர்.

அம்மையாரது இழப்பினுல் ஆழ்ந்த துக்கமெய்தியிருக்கும் குருசுவாமி குடும்பத்தினருக்கு நமது நாட்டு எழுத்தாளர்களின் சார்பிலும் மல்லிகை சார்பிலும் நமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

— ஆசிரியர்

நுவனுடன் அமீதா வாழத் தயார் இல்லை என்று கூறிச் சென்று விடுகின்ருர்.

நாட்கள் செல்லச் செல்ல நுவனின் தாயார் மனம் மாறுகின்றது. ரேனு சிறந்தவள் என்ற எண்ணம் துளிர்விடவே மகனை ரேனுவை அழைத்து வர அனுப்புகின்ருள். முதலில் மறுத்த ரேனு பிறகு சம்மதித்து நுவன் வீட்டுக்கு வருகின்ருள். ரேனுவின் மகனையும் மடத்திலிருந்து வீட்டுக்கு அழைத்து வரச் சொல்கின்ருள். இத்துடன் கதை முடிகின்றது.

உண்மையில் கலாசார இறுக்கங்களோ, கண்ணகித் தனங்களோ இல்லாத, நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, சாதாரண காதல் கதைதான். இந்த இரண்டு மணித்தியாலம் படத்தை அல்ல, கலைத்துவமான கவிதையைப் பெருமைப் படுத்துவது நடிப்பும், படப்பிடிப்பும், வசனமும்தான். பட ஆரம்பமே படத்தின் தன்மை (தரத்தை) சொல்லி விடுகின்றது. உணர்வுகளைப் பரிமாறத் தெரிந்த, பிரச்சனைகளை அணுகத் தெரிந்த மனிதர்கள். தேவைக்கு மேலாக ஒரு சொல்லைக் கூட சிந்தாத வசனங்கள், பாத்திரத்தை பிரதிபலிக்கும் அமைதியான நடிப்பு, அவசியமான போது பாடப்படுகின்ற மூன்றுபாடல்கள், யதார்த்தத்தை மீருத ஆனுல், கலைத்துவத்தைச் சிதைக்காத காட்சிகள், 'அசகாய' சூரத்தனத்திற்கும் கதாநாயகத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்காத இயக்குநர் இவைகள் படத்தை சிறப்பாக அமைக்கின்றன. 'காவடி' ஆட்டத்துடன் கூடிய பாடலும் காட்சிகளும் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன.

ரேனுவை தோட்டக்காரன் பயப்படுத்தும் காட்சி நீக்கப்பட்டு இருக்கலாம். அமீதாவை இன்னும் கொஞ்சம் பிரச்சனைக்காரியாகக் காட்டியிருந்தால் கதை மேலும் வலுப்பெற்று இருக்கும். தான் விரும்பும் தரமான படங்களில் மட்டுமே நடிக்கும் டொனி ரணசிங்க நுவனுகவும், தமிழக நடிகை லட்சுமியைப் போல எல்லாப் பாத்திரத்தையும் சிறப்பாக நடிக்கக்கூடிய, சர்வதேச விருது பெற்ற 'பைலட் பிரேம்நாத்' கூட்டுத் தயாரிப்பில் நடிப்பில் இருட்டிப்பு செய்யப்பட்ட மாலினி பொன்சேகா ரேனுவாகவும், பழம் பெரும் நடிகை காலஞ்சென்ற ருக்மணிதேவி நுவனின் தாயாகவும் நடித்துள்ளார்கள். ஆர்ப்பாட்டம் இல்லாமல் அலறித் துடிக்காமல் மாலினி நெஞ்சை நெகிழவைக்கின்ருர்.

மொழி தெரியாதிருந்தாலும் நல்ல திரைப்படமொன்றை ரசிக்க விரும்புகிறவர்கள் இந்தப் படத்தைப் பார்க்கலாம்.

# என் குழந்தை

கே. விஜயன்

நெசவாலையில் எனக்கு வேலை கிடைத்தது. ஆயிரந் தொழிலாளர்கள் வேலை செய்யும் அந்த தொழிற்சாலைக்குள் ஒரு நாள் விடியற்காலையில் நானும் போய் நுழைந்தேன். அம்மைத் தழும்புகளை முகமெங்கும் புள்ளிகளாகக் கொண்டிருந்த ஒரு வயோதிகக் காவல்காரன் என்னை கூட்டிக் கொண்டுபோய் தூசியும் புகை மண்டலமுமாக இருந்த ஒரு பகுதிக்குள் தள்ளினன். நான் திணறிப்போனேன். ஏதோ மேக வெளிக்குள் வந்து விழுந்தாப்போல திக்குமுக்காடினேன்.

சில நாழிகைக்குள் எல்லாம் பழகிவிட்டது. முன்னால் படர்ந்துவிட்டிருந்த புகையை ஊடுருவிய பொழுது ஒரு பெண் நீண்ட தடியினுல் பெரிய வாளியொன்றில் எதனையோ கலக்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

'என்ன இது! இயந்திரம் மாதிரி சுழல்கிறுளே!'

அவள் தலைதூக்கிப் பார்த்தாள்.

மறுபடியும் குனிந்த தலையுடன் தடியை வேகமாகச் சுழற்றத் தொடங்கினுள்.

இரண்டு மூன்று நாட்கள் பறந்து விட்டன.

மிகவும் சங்கோஜப் பேர்வழியான நான் இப்பொழுது கொஞ்சம் முன்னேறி விட்டேன். என்னுடைய இயல்பான லஜ்ஜை குணத்தை தள்ளிவைத்துவிட்டு அவளைப் பேச்சுக்கிழுத்தேன்;

'இது, மிச்சம் கஷ்டமான வேல இல்லியா?'

அவள் தலை தூக்கிப் பார்த்தாள். இயந்திரத்தில் முழுகி நனைந்து பறந்து விரிந்து ஓடிக் கொண்டிருந்த வர்ண துணிகளுக்கிடையாக அவளுடைய முகம் தெரிந்தது. முத்து முத்தாக முகத்தில் அரும்பிக் கிடக்கும் வியர்வை முத்துக்களை 'சளுக்' கென வழித்தெறிந்து விட்டு என்னை நோக்கி புன்னகைத்தாள்;

'பழகிவிட்டது, அதுதான் கஷ்டம் தெரியல' அவளுடைய மெதுவானதொரு முணுமுணுப்பு.

'இங்கே காத்தே இல்ல' அவள் கலகலவென நகைத்தாள்.

அவள் சாயத்தைக் கலக்கிக் கொண்டிருந்த இடத்திலுள்ள

காங்கைக் குழாயில் வெடிப்பு தோன்றியிருந்ததால் அதன் வழியாக 'குபுகுபு' வென வெண் புகை வெளிப்பட்டு எங்கும் வியாபமாகி விட்டிருந்தது. அந்தப் புகை வெளியில் அவள் மறுபடியும் இயந்திரமாக இயங்கத் தொடங்கிவிட்டாள்.

'இது அசிங்கமான இடம். சுத்தமில்லாத தண்ணி நோய்க் கிருமிகளை உண்டாக்கும்.........'

நான் சொல்லி முடிக்க முன்னரே அவளுடைய 'களுக்' கென்ற சிரிப்போசை அதனை முறித்தது.

'நோய்க் கிருமி, தூசி, பஞ்சுத்தூள், ஒடம்பை பத்தவைக்கும் ஸ்டீம் சூடு, அவ்வளவும் இருக்கா அதுக்கென்ன?.........' வேலை செய்வதை நிறுத்திவிட்டு அவள் என்னை நோக்கி அனுதாபமுடன் கேட்டாள். சாயம் கலக்கும் தடி நுனியை கைவிரல்கள் பொத்திக் கொண்டிருக்க முகத்தின் நாடி அதன் மீது அமர்ந்திருக்கிறது. வியர்வையில் நனைந்தும், வேலைக் களைப்பினால் வாடி தளர்ந்து இருண்டும் இருந்த பொழுதும் அவள் முகம் என்னை வசீகரித்தது. விழி இமைகளில் சலனத்தை உண்டுபண்ணாமல் வெகுநேரம் அவளை உற்று நோக்கினேன். லஜ்ஜையினால் அவள் முகத்தில் செவ்வரிகள் படர்ந்தன.

'பொல்லாத நசல்கள் வரும்'

மறுபடியும் அவளுடைய கலகலப்பான நகைப்பொலி கேட்டது.

'பசியை விட பெரிய நோயா?' என்னைத் திருப்பிக் கேட்டுவிட்டு சுவரை நிமிர்ந்து பார்த்தாள். அங்கே பிரேம் போட்டதொரு சட்டம் தொங்கிக் கொண்டிருந்தது.

'விசுவாசமுள்ள தொழிலாளியே! ஆண்டவனை நேசிப்பது போல உன் முதலாளியை நேசி, அவர் இல்லையென்றால் ஒரு பிடி சோறுவது உனக்குக் கிடைக்காது என்பதை மறவாதே!'

அதில் அச்சடிக்கப்பட்டிருந்த அந்த வாசகங்களைப் படித்துவிட்டு அவளைப் பார்த்த பொழுது அவள் நன்றிப் பெருக்குடன் அந்த வாசகங்களை இன்னும் படித்துக் கொண்டிருந்தாள்.

'மிகவும் நன்றிக் குணமுள்ள பெண்' மனதிற்குள்ளாக சொல்லிக் கொண்ட நான் அன்போடு அவளை நோக்கினேன்.

'உன் பெயர்?'

'ஜெபமாலை!'

'அழகான பேர்' அவள் முகத்தில் மறுபடியும் அந்த செவ்வரிகள் தோன்றின.

'எவ்வளவு காலமா இங்கே வேல?'

'பதினொரு வருஷம்!'

'இந்த வேலயா?'

'ஆமா!'

என் உடம்பு லேசாக நடுங்கியது. எலும்புகள் சிலிர்த்துக் கொள்ளுமாப் போன்ற ஓர் உணர்வு பரவியது.

✣

பதினொரு ஆண்டுகள் என்பது லேசானவையா என்ன? அதிலும் அழுக்கும் அசிங்கமுமான இடம். காங்கைச் சூடு, சாயங்கள், அவற்றிற்குப் பயன்படுத்தும் மருந்து வகைகள் பிளிச்சிங் பவுடர் போன்றவற்றின் தூசி எல்லாமே மனிதனை நரகத்தை நோக்கித் தள்ளிவிடும் விஷப் பொருள்கள்!

காற்றும் வெளிச்சமும் இல்லாத இந்த இடத்திற்கு பதினெட்டு வயதில் வந்து நுழைந்து பதினொரு ஆண்டுகளை கடுமையான உழைப்பிலே கழித்துவிட்டாளென்றால் அதுவென்ன லேசான காரியமா என்ன? குடும்பத்தின் முழுச் சுமையையும் தலையில் சுமந்து உழைப்பிலே கண்ணும் கருத்துமாகி வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டிருக்கிறாள்.

எங்களுக்குள் வளர்ந்த காதல் எங்களை இணைத்தது. தொழிலாளர் குடியிருப்பில் நாங்கள் வசித்து வந்தோம். அந்திப் பொழுதுகளில் வாசல் படிக்கட்டில் அமர்ந்து மணலில் குழந்தைகள் தூசி பறக்க கூச்சலிட்டு கும்மாளமடித்து விளையாடுவதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருப்போம். சிலவேளைகளில் அவளுடைய கண்கள் கலங்கி நீர் குளிர்ந்து பிரகாசிக்கும். அழுக்கும், வடிக்கின்ற மூக்குச் சளியுமாக விளையாடுகின்ற அரை நிர்வாணக் குழந்தைகளைத் துன்ப நீர் சுரக்கும் கண்களுடன் பார்ப்பாள்.

இருள் நிறமான தொழிலாளர் குடியிருப்பின் மீதாக தவழ்ந்து செல்கின்ற மாலைச் சூரியன் பொன்னிறக் கதிர்களை வெறிக்கப் பார்த்தவாறு என்னவோ முணுமுணுப்பாள்.

'என்ன ஜெபா?'

தனது நிர்ச்சலனமான பார்வையிலிருந்து விடுபடும் அவள் என்ன என்பது போல் என்னைப் பார்ப்பாள். பிறகு அவளாகவே சொல்வாள்: இல்லை என்னைக் கேட்பாள்.

'இந்தக் குழந்தைகளெல்லாம் ஏன் இப்படி இருக்கு?'

'எப்படி?'

'அசிங்கமா, கறுப்பா!'

நான் கலகலவென நகைப்பன், அதில் கிண்டல் பறக்கும்.

'என்னத்துக்கு நசலுக்காகப் பயப்படனும், பசி முடிஞ்சாப் போதாதா?'

அவள் திகிலுடன் என்னைப் பார்ப்பாள்: கண்கள் மருட்சியில் உருளும்.

'நமக்குப் பொறக்குற குழந்தைகள் இப்புடியா இருக்கும்'

'இதைவிட மோசமாவும் பொறக்கலாம்'

'அது ஏன்?'

'மனுஷன் தின்றது, மனுஷன் குடிக்கிறது, ஏன் வாழ்றது சுவாசிக்கிறது எண்டு அடுக்கிக் கிட்டே போனா எல்லாமே சுத்தமா இருக்கனும். இல்லாட்டி அது வெசம்தானே'

அவள் மௌனமாகவிருந்தாள். ஓர் ஊமையைப் போல வானத்தையே வெகு நேரம் வெறித்து நோக்கினாள்.

'பரம மண்டலத்திலுள்ள எங்கள் பிதாவே! எனக்குப் பெறக்கும் குழந்தை ஒரு தேவ பாலனைப் போன்று அழகாக இருக்க வேண்டும்' அவள் ஓசையெழுப்பாமல் மனதிற்குள்ளாகவே பிரார்த்தனை செய்வது எனது இதயத்திற்கு தெளிவாகக் கேட்டது. என் இருதயமும் மானசீகமாக அந்தப் பிரார்த்தனையில் கலந்து கொண்டது. ★

பிரசவத்தின் போது ஜெபா துடியாகத் துடித்தாள்; உறுப்பு உறுப்பாக வெட்டியெறிவது போல அலறினாள். மெலிந்த கறுப்பு நிறமான ஒரு சதைத் துண்டைப் பிரசவித்துவிட்டு தன் மூச்சை அடைக்கிக்கொண்டாள்.

மில்லுக்குப் பக்கத்திலுள்ள அந்த மயானத்தில் ஜெபாவின் சடலத்தைப் புதைத்துவிட்டு திரும்பிய பொழுது இந்த உலகை சூன்யம் ஆக்கிரமித்துக்

கொண்டிருப்பதாகவும் அங்கே ஜன்னிக் காய்ச்சலால் நான் மட்டும் தன்னந்தனியனாக நடுங்கிக் கொண்டிருப்பதாகவும் பயப்பிராந்தி என்னை ஆட் கொண்டது.

என் கனவு, என் நினைவு அனைத்துமாக என் மகன் ஜோர்ஜ் வளர்ந்தான், அவனை பூப்போல பராமரித்து வளர்ப் பதிலே காலத்தைச் செலவழித் தேன், எனினும் என் ஜெபா வின் நினைவு அடிக்கடி தோன்றி என்னை அலைக்கழித்ததால் நான் குடிக்கத் தொடங்கினேன். தொழிலாளர்களில் அநேகம் பேர் குடிக்கிறார்கள் நான் குடித் தாலென்ன?

மூன்று வருடங்களை காலம் அள்ளிக்கொண்டு சென்று விட் டது. சம்பளம் பெற்ற ஒருநாள் இரவு நன்றாகக் குடித்துவிட்டு வீடு சென்று கதவைத் தட்டி னேன்.

ஓ...... அது திறந்தல்லவா கிடக்கிறது. குப்பி விளக்கின் மினுமினுப்பில் என் மகன் வெறும் தரையில் சுருண்டு படுத்துக் கிடப்பது தெரிந்தது. அவனை நான் தூக்கியபொழுது என் குடியுணர்வு மின்னலென மறைந்துவிட்டது.

'இதென்ன நெருப்புத் துண் டையா தொட்டேன்' மனம் படபடவென வேகமாக அடித் துக் கொள்ள ஓடோடிச் சென்று குப்பிவிளக்கை தூக்கிக்கொண்டு வந்து அவன் உடலருகே நீட்டி குனிந்து பார்த்தபொழுது என் சர்வாங்கமும் ஒடுங்கிவிட்டது.

ஜோர்ஜ்ஜின் காதுகள் விரிந்து புடைத்து சிலிர்த்தவா றிருக்க, மூக்கு விம்மி வீங்கிக் கிடக்க, கண்களில் பாசி படர்ந் தாற் போன்றதொரு பச்சை வர்ணம் நிழலாடுகின்றது.

சில நாட்களிலே அவனு டைய சிறிய மேனி பெருத்து விட ஒட்டி உலர்ந்த வயிறு ஒரு பானையாக உருமாறத்தொடங்கி கால்களும் கைகளும் பெரிய தொரு கொழுத்த மனிதனுடை யதைப் போன்று மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாயின.

ஒரு நாள் வெள்ளிக்கிழமை காலையில் நான் வேலைக்குப் போகத் தயாராகிக் கொண்டி ருந்த நேரத்தில்...... என் மக னின் கால் விரல்களில் வெடிப் புத் தோன்றி அதிலிருந்து 'சலம்' சொட்டுச் சொட்டாக கொட் டத் தொடங்கியது.

நான் பிசாசைக் கண்டவ னைப் போன்று ஓடத்தொடங்கி னேன். நெசவாலைக்குள் சென்று நுழைந்த நான் ஒரு மதயானை யைப் போல நாலா திசைகளி லும் தாவி சுவர்களிலெல்லாம் மோதி, கையில் கிடைத்த ஓர் இரும்புக் கம்பியினால் அந்தப் பிரேம் போட்ட சட்டம் எங் கெல்லாம் தொங்குகிறதோ அங்கெல்லாம் சென்று அவற்றை அடித்து நொறுக்கி துகளாக்கி னேன்.

அந்த அம்மைத் தழும்புக் காவற்காரன் பறந்து வந்தான், என் பிடறியில் தாக்கிய அவன், இழு இழுவென இழுத்துக் கொண்டு போய் வாசற்கதவிற்கு அப்பால் தள்ளிவிட்டான்.

மணலில் விழுந்தேன். என் நாடியில் கல்லொன்று குத்தி கிழித்துவிட்டது. சிவப்பு வெள் ளம் மளமளவெனக் கொட்டு கின்றது.

நான் எழுந்து தலைநிமிர்ந்த பொழுது 'அடடா' அதுவென்ன நூற்றுக்கணக்கான தொழிலா ளர்களுக்கு நடுவிலே அந்த அம்மைத் தழும்புக்காரன் ஒரு பந்தாகப் பறந்து கொண்டிருக் கிறானே!

# வரலாற்றின் போக்கை மாற்றிய அக்டோபர் புரட்சி

மாக்ஸிம்கிம்

அக்டோபர் புரட்சி இல்லாமல் 20-ம் நூற்றுண்டில் உலக வரலாற்ளுற எண்ணிப் பார்க்க முடியாது. ரஷ்ய உழைப்பாளி வர்க்கம் உலகத்திலேயே முதன் முறையான வெற்றிகரமாக சோஷலிசப் புரட்சியை நடத்தி, இந்தப் பரந்த நாட்டை ஏகாதிபத்திய உலகத்திலிருந்து மீட்டபின், அக்டோபர் புரட்சியிலிருந்து காலத்தை உலகம் கணக்கிட்டு வருகிறது.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது, வெவ்வேறு விதமான இரு சமுதாய அமைப்புக்களும் அரசியல் அமைப்புக்களும் இருந்து வரும் 62 ஆண்டுகள் ஒரு குறுகிய காலமே ஆகும். ஆனல் சோஷலிச லட்சியத்தின் வலிமையையும், மார்க்சிய—லெனினிய சித்தாந்தம் சரி என்பதையும் நிரூபிக்க, இந்தக் காலம் போதுமானதாகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புரட்சிக்கான சமிக்ஞையை 'ஆரோரா'ப் போர்க் கப்பல் கொடுப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்னுல், ரஷ்ய மார்க்சியவாதியான கிரிகொரி பிளெக்கனேவ் வரலாற்று வளர்ச்சியின் போக்கை உணராமல், 'சோஷலிச ரொட்டியைச் சுடுவதற்கு வேண்டிய மாவை வரலாறு இன்னமும் அரைக்கவில்லை' என்ருர். ஆனுல், தீர்க்க திருஷ்டியுடன் கூடிய லெனின்தான். சோஷலிசப் புரட்சியின் யதார்த்தத் தேவையையும் தவிர்க்க முடியாமையையும் நிரூபித்து, ஏகாதிபத்திய முறையை ஆராய்ந்து பல்வேறு முதலாளித்துவ நாடுகளும் சரி சமமான வளர்ச்சி அடையவில்லை என்பதைக் கண்டு, ஒரு நாட்டில் மட்டும் வெற்றிகரமான சோஷலிசப் புரட்சியை நடத்துவது சாத்தியம் என்ற சித்தாந்த ஆயுதத்தை ரஷ்ய உழைப்பாளி வர்க்கத்திற்கும், போல்ஷவிக் கட்சிக்கும் அளித்தார். இவ்விதம் புதிய சமுதாயத்தையும், உழைக்கும் மக்களின் ஆட்சியையும் நிர்மாணிக்கும் பாதையில் செல்லும் முதல் நாடாக ரஷ்யா ஆயிற்று.

அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற உடனேயே, இந்த 'ரஷ்யப் பரிசோதனை' உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான தொழிலாளரையும் விவசாயிகளையும் கவரும் என்பதை உணர்ந்து, பின்வருமாறு எழுதினர்: 'ரஷ்யாவில் சோவியத் சோஷலிசக் குடியரசானது, எல்லா நாடுகளின் மக்களுக்கும் உயிர்த் துடிப்புள்ள உதாரணமாக விளங்கும்: இந்த உதாரணத்தின் பிரசார விளைவும்

புரட்சிகரமான மாறுதல்களை நிச்சயமான ஏற்படுத்தும் விளைவும் மகத்தானவையாகும்' என்று எழுதினார் லெனின். முதலாளித்துவ நாடுகளின் பூர்ஷ்வாக்கள் இதை உணர நெடு நாள் ஆகவில்லை. அக்டோபர் புரட்சி நடந்த பொழுது அவர்கள் அதை ஒரு 'விபத்து' என்றும், ரஷ்ய வரலாற்றின் 'விசித்திரப் பிறவி' என்றும் ஒதுக்கினர். ஆனால் சீக்கிரத்திலேயே அவர்களின் கருத்து மாறி விட்டது. இளம் சோவியத் குடியரசை அழிப்பதற்கு 14 ஏகாதிபத்திய நாடுகள் ஒன்று சேர்ந்ததன் மூலம், அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவத்தை உலக பூர்ஷ்வாக்கள் அங்கீகரித்துள்ளனர் என்று லெனின் மிகவும் பொருத்தமான முறையில் கூறினார். ரஷ்ய உழைப்பாளி வர்க்கமும், விவசாயிகளும், உழைக்கும் மக்களின் மற்றப் பிரிவினரும் போல்ஷவிக்குகளை ஆதரித்து நின்று, உலகத்தின் முதலாவது சோஷலிச நாட்டைக் காப்பாற்றினர்.

உலகம் முழுவதிலும் வர்க்கப் போராட்டத்தின் நிலைமையை அக்டோபர் புரட்சியின் வெற்றியானது வியத்தகு முறையில் மாற்றியதுதான் இந்தப் புரட்சியின் முக்கியத்துவமாகும். ஜெர்மனி, ஹங்கேரி, ஸ்லோவாக்கியா, பின்லாந்து முதலிய நாடுகளின் புரட்சி இயக்கத்திற்கும், பல நாடுகளின் பிரம்மாண்ட வேலை நிறுத்தங்களுக்கும் ரஷ்யப் புரட்சி உத்வேகம் ஊட்டி, ஆசியாவின் தேசிய விடுதலை இயக்கத்தில் ஒரு புதிய கட்டத்தை ஏற்படுத்தியது. அதோடு கூட, அக்டோபர் புரட்சியின் விளைவாக எல்லாக் கண்டங்களிலும், பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிறுவப்பட்டன. கம்யூனிஸ்டு இயக்கம் நம் காலத்தின் மிகப் பெரிய அரசியல் இயக்கமாயிற்று. இப்பொழுது 90 நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உள்ளன. அவற்றின் மொத்த உறுப்பினர் தொகை 7 கோடி. அவற்றில் 15 கட்சிகள் ஆளும் கட்சிகளாக உள்ளன.

அக்டோபர் புரட்சியானது ரஷ்ய மக்களை தேசிய ஒடுக்கு முறையிலிருந்து விடுவித்து, ஏகாதிபத்தியத்தின் காலனி ஆதிக்க முறையில் நெருக்கடி ஏற்படுத்தியது. ஆசிய, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் சுதந்திரத்திற்காகப் போராடும் எல்லா நாட்டு மக்களையும் சோவியத் மக்கள் ஆதரித்து வந்திருக்கின்றனர்.

62 ஆண்டுகளுக்கு முன், உலக மக்கள் தொகையில் 7.8 சதவிகிதத்தினரையும், உலகின் நிலப் பரப்பில் ஆறில் ஒரு பங்கையும் முதலாளித்துவத்தின் பிடிப்பில் இருந்து அக்டோபர் புரட்சி விடுவித்தது. இப்பொழுது உலக சோஷலிச அமைப்பு மேன்மேலும் பலம் பெற்று வருகிறது. இன்று உலக நிலப்பரப்பில் கால் பங்கும், உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு உலக சோஷலிச அமைப்பின் கீழ் உள்ளது.

உலகில் உற்பத்தியாகும் பண்டங்களில் 40 சதவிகிதத்திற்கு மேல் சோஷலிச நாடுகளில் உற்பத்தியாகின்றன.

அக்டோபர் புரட்சியானது, மாற்ற முடியாத ஒரு போக்கின் ஆரம்பம் ஆகும்; உலகில் அதன் செல்வாக்கு மேன்மேலும் அதிகரித்து வருகிறது.

# சோவியத் வாழ்க்கைத் தரம்

அலக்ஸாந்தர் குபேர்

வாழ்க்கைத் தரத்தின் இயக்காற்றலைப் பற்றி ஒருவர் பேசும் போது, இத்துறையில் சோவியத் யூனியன் பெருஞ் சாதனைகளை ஈட்டியுள்ளது என்றே நிச்சயம் கூறலாம். மக்களின் மெய் வருமானம் ஒவ்வொரு 15 ஆண்டிலும் இரட்டிக்கிறது. அவற்றின் வளர்ச்சி மேற்குலகிற்கு வியப்பூட்டும்.

1940-ம் ஆண்டிற்கு முந்திய யுத்த முற்கால ஆண்டுகளின் போது இருந்த நிலைமையோடு ஒப்பிடுகையில் இன்றைய சோவியத் மக்கள் 14 தடவைகள் அதிகமான இறைச்சியையும், 9,2 தடவைகள் அதிகமான வெண்ணெயையும், 18 தடவைகள் அதிகமான பாலையும், 25 தடவைகள் அதிகமான முட்டையையும், 30 தடவைகள் அதிகமான தளவாடத்தையும், 13.3 தடவை அதிகமான பிற வெளியணிகளையும், 4 தடவைகள் அதிகமான வானொலிப் பெட்டிகளையும் வாங்குகின்றனர்.

ஆண்டு ஒன்றுக்கு 20 லட்சம் வீடுகள் நிர்மாணிக்கப்படுவதையும், அவற்றின் இலவச விநியோகத்தையும், உலகிலேயே மிகக் குறைந்த வாடகையையும் குறிப்பிட்டாக வேண்டும். இது இப்போதைக்கு 50 ஆண்டுகளுக்கும் மேலாக மாறாமலே இருந்து வருகின்றது. சர்வதேச ரீதியான கட்டாய நடுநிலைக் கல்வி, நானாவிதமான மருத்துவப் பராமரிப்பு, பரிபூரண தொழில், சில்லறை விலைகளது பொதுவான மட்டத்தின் ஸ்திரம் போன்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

சுருக்கமாகச் சொன்னால் சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரமானது ஒரு தலைமுறையினரின் வாழ்க்கைக் காலத்திற்குள் தர ரீதியான புதிய மட்டத்திற்கு எழுச்சி பெற்றுள்ளது; எமது பெற்றோர்களுக்கு அரியதாகவும் ஆடம்பரமானவையாகவும் இருந்து வந்தவை எமக்கு அன்றாட அவசியப் பொருட்களாகவும் தேவைகளாகவும் மாறியுள்ளன.

மக்களுடைய உணவின் கலோரி பெறுமானம், அவற்றில் புரதங்களின் அடக்கம் ஆகியவற்றில் இந்நாடு தேவையான மட்டத்தை எய்தியுள்ளது;

1965-ல் ஒரு நூறு குடும்பங்களுக்கு 24 தொலைக் காட்சிப் பெட்டிகளே இருந்தன; 78-ல் இது 83 ஆக உயர்ந்தது; இதேபோன்ற வீட்டுப் பாவனைக்கான குளிர்சாதனப் பெட்டிகளின் எண்ணிக்கை முறையே 11, 78, 110 ஆகும்.

கார்களின் விற்பனவு 65-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 20 தடவைகளாக அதிகரித்துள்ளது. தனியாருக்குச் சொந்தமான கார்களின் எண்ணிக்கையில் நாம் அமெரிக்காவுடன் போட்டியிடவில்லை; வச

தியும் துரிதமும் பொதுவில் கிடைக்கக்கூடிய போக்குவரத்துச் சாதனங்களின் முன்னேற்றமே சோவியத் யூனியனின் பயணிகள் போக்குவரத்து வளர்ச்சியின் முக்கிய திசை வழியாகும். தனியாருக்குச் சொந்தமான ஒரு கார் பொதுப் போக்குவரத்தின் இடத்தில் இல்லை. அது மேலாதிக்கமானதே.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல 'வாழ்க்கைத் தரம்' பற்றிய கருத்தமைப்பு முழுக்க முழுக்க பாவனைப் பொருட்களும் ஸ்தம்பித்து விடவில்லை. பொதுவாக மனிதனை, பொருட்களைப் பாவிப்பவனாக மாத்திரம் நாம் பார்க்கவில்லை. அரசால் பேணப்படும் பொது சௌக்கிய சேவைகளின் வாய்ப்புகளிலும் எண்ணிக்கையிலும், நூலகங்கள், வாசகர்களின் எண்ணிக்கையிலும், மொழிபெயர்ப்பு இலக்கியங்களின் எண்ணிக்கையிலும் பொருட்காட்சிச் சாலைகள், கலையரங்குகள், சினிமாக்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கையிலும் கலை, களியாட்டத்தின் வெகுஜன அளவின் மட்டத்திலும் மிகவும் வளர்ச்சியுள்ள முதலாளித்துவ நாடுகளைவிட சோவியத் யூனியன் பெரிதும் முன்னணியில் இருப்பது தற்செயலானதல்ல.

எமது நாடு ஒரு 'பாவனையாளர் சமுதாய'மாகவும், பொருளாயத பெறுமானங்களின் அளவில் எல்லாவற்றையும் கணிப்பதாகவும் மாறுவதற்கு விரும்பவில்லை. சொல்லின் முழுமையான அர்த்தத்தில் இது மனிதனாக இருந்துவரும் அபிலாஷையாகும். சர்வ வளர்ச்சியையும் பெற்ற மனிதனை உருவாக்குவது என்ற கடமையே எமது எமது அரசும் சமுதாயமும் முரணின்றியும் நெறி பிறழாமலும் தீர்த்து வைக்கும் கடமையாக உள்ளது. ❉

---

# அக்டோபர் புரட்சியும் சோஷலிசப் பொருளாதாரத்தின் அடிப்படைகளும்

யூரி போல்யகோவ்

அடிமைத் தளைகளிலிருந்து உழைப்பாளி மக்களுக்கு விடுதலை அளித்தல், மூலதனத்தின் அரசியல், சமுதாய, பொருளாதார விலங்குகளிலிருந்து அவர்களை விடுவித்தல், தாயகத்தின் மற்றும் தமது வாழ்வின் உண்மையான எஜமானர்களாக அவர்களை மாற்றுதல், அவர்களது வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல், இவை சோஷலிசப் புரட்சியின் கடமைகளாகும் என்பதை மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் அனுபவம் காட்டுகிறது.

சோவியத் யூனியனில் சோஷலிசப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் எவ்வாறு உருவாக்கப் பெற்றன?

1917-ல் அக்டோபர் புரட்சி வெற்றி அடைந்தவுடன் கேந்திர பொருளாதாரத் துறைகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் பணியில்

பாட்டாளி வர்க்கம் இறங்கியது. நிதி அமைப்பைத் தன் வசத்தில் சோவியத் அரசு எடுத்துக் கொண்டது. பூர்ஷ்வாக்கள் வசமிருந்த பாங்குகள் அரசுடமை ஆயின. ரயில்வே போக்குவரத்து மற்றும் கப்பல் வணிகம் அனைத்தையும் அரசு எடுத்துக் கொண்டது. தொழில் நிறுவனங்களைப் படிப்படியாக அது நாட்டுடமை ஆக்கியது; தொழிலாளர் கட்டுப்பாட்டு முறையை நாடெங்கும் புகுத்துவதன் மூலம், இந்தப் போக்கு தொடங்கப் பெற்றது; தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற பாக்டரி கமிட்டிகள் மூலம், தொழிலாளர் கட்டுப்பாடு என்ற முறை அமல் நடத்தப் பெற்றது. அடுத்தபடியாக, தொழிலாளர் கட்டுப்பாடு என்ற முறையிலிருந்து ஆலைகளை நாட்டுடமையாக்கல் என்ற கட்டத்திற்கு அரசாங்கம் சென்றது; 1918 ஜுன் மாதத்திற்குள், 500 முக்கிய ஆலைகளும் தொழிலகங்களும் நாட்டுடமை ஆக்கப்பட்டன. அத்துடன் மற்றொரு முக்கிய நடவடிக்கையும் எடுக்கப் பெற்றது; அதாவது, அயல் துறை வணிகத்தில் அரசாங்க ஏகபோகம் என்ற முறை புகுத்தப்பட்டது. நாடளாவிய முறையில் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்காக, தேசப் பொருளாதாரத்தின் சுப்ரீம் கவுன்சில் உருவாக்கப்பட்டன.

நிலம் பற்றிய லெனினது ஆணைப்படி, நில உடமை முறை ஒழிக்கப்பட்டது. அரசுப் பண்ணைகள், ஆரம்ப கால கூட்டுப் பண்ணைகள் ஆகியவை உருவாக்கப் பெற்றதால், கிராமப்புறத்தில் ஒரு பொதுத் துறை தோன்றியது. 1921 இளவேனிற் காலத்தில், 'புதிய பொருளாதாரக் கொள்கையைக் கட்சியும் தேசமும் அமல் நடத்தத் தொடங்கின; தமது உபரி உற்பத்தியை தாமே வைத்துக் கொள்ளவும், அதை விற்கவும், உற்பத்தியை விரிவுபடுத்தவும், விவசாயிகள் இப்போது அனுமதிக்கப் பட்டனர். தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒரு பொருளாதார கூட்டணியை வலுப்படுத்துவதற்கு, இது பலமான அடித்தளம் இட்டது.

நகரம், கிராமம், தொழில், வணிகம் ஆகியவற்றில் முதலாளித்துவ சக்திகளைப் படிப்படியாகச் சோவியத் அரசு கட்டுப்படுத்தியது. சோஷலிச தொழில்மயமாக்கலைத் தொடர்ந்து, தொழில் முறையில் தனியார் மூலதனம் அறவே அகற்றப்பட்டது. கூட்டுப் பண்ணை முறையின் மூலம், கிராமப்புற முதலாளிகள் என்ற வர்க்கம் ஒழிக்கப்பட்டது. அரசாங்க — கூட்டுறவு வணிகத்தின் வளர்ச்சியானது, வணிகத் துறையில் தனியார் மூலதனத்திற்கு முடிவு கட்டியது.

1930-ஆம் ஆண்டுகளின் முதற் பாதியில், சோஷலிசத்தின் பொருளாதார அடிப்படைகள் நிறுவப்பட்டன. இதன் பயனாக, இன்று சோவியத் யூனியன் வளர்ச்சி அடைந்த சோஷலிச சமுதாயம் நிர்மாணிக்கப் பெற்றுள்ளது.

★

# வேலையின்மைப் பிரச்னை சோவியத் யூனியன் அதற்கு எவ்வாறு தீர்வு காணப்பட்டது?

போரிஸ் குரோத்கோவ்

தொழில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளில் ஒரு புதிய சுற்று பொருளாதார மந்தம் ஏற்பட்டிருப்பதை உலகம் இன்று கண்டு வருகின்றது. இதன் பொருள் அடுத்த சில மாதங்களில், இந்த நாடுகளிலும், மேலை நாடுகளுடன் நெருக்கமான பொருளாதார இணைப்புக் கொண்டுள்ள நாடுகளிலும் வேலைவாய்ப்புப் பிரச்னை உக்ரமாகும் என்பதாகும். வளர்முக நாடுகளில் ஏற்கெனவே சுமார் 35 கோடிப் பேர் வேலையில்லாமல் இருக்கின்றனர். ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் வேலையில்லாமலிருக்கும் 30 கோடிக்கு மேற்பட்டவர்களும் இதில் அடங்குவர்.

சோவியத் யூனியனில் வேலையின்மைப் பிரச்னைக்கு எவ்வாறு தீர்வு காணப்பட்டது?

முதலாவது சோவியத் ஐந்தாண்டுத் திட்டம் ('929—3?) நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கும், விவசாய அரங்கை கூட்டுறவுப் பாதையில் மறுசீரமைப்பதற்கும் அடித்தளமிட்டது. நாடு முழுமையிலும் பிரம்மாண்டமான பணி துவக்கப்பட்டது. திட்டத்தில் 1500 க்கு மேற்பட்ட பெரிய தொழில் நிலையங்கள், பேக்டரிகள், மின் நிலையங்கள், சுரங்கங்கள் கட்டுவது எதிர் நோக்கப்பட்டு உள்ளது. கிராமப்புறத்தில் விவசாயிகளின் சிறு வீத விவசாயப் பண்ணைகள் கூட்டுப் பண்ணைகளாக ஒன்றுபடுத்தப் பட்டன. புதிய நிர்மாணத் திட்ட நிலையங்கள் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தன.

வேலையின்மை வேகமாகக் குறைந்து வந்தது. ஆயினும், அதனால் எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வு ஏற்பட்டு விடவில்லை. தேர்ச்சித் திறன் வாய்ந்த மனித சக்தியின் பற்றாக்குறை தோன்றவே, தனித் தேர்ச்சியாளர்களைப் பயிற்றுவிப்பதில், அரசு மிகுந்த கவனம் செலுத்தியது. கல்லூரிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் செல்ல விரும்பும் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் தயாரிப்பு வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இவர்கள் முன்பு செகண்டரி பள்ளிப் படிப்பைக்கூட முடிக்க முடியாமல் இருந்தனர். தொழிற் பயிற்சிப் பள்ளிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அளவ 5 லட்சத்திற்கு மேற்பட்ட தேர்ச்சித் திறன் வாய்ந்த இளம் தொழிலாளர்களைப் பயிற்றுவித்தன. இந்த ஏற்பாடுகள் அனைத்தும் அரசு நிதி உதவியினால் நடைபெற்றன.

இன்று அனைத்து சோவியத் பிரஜைகளும் தமது ஈடுபாடுகளுக்கும், திறமைகளுக்கும், பயிற்சிக்கும் ஏற்ப தமது தொழிலையோ அல்லது வேலையையோ தேர்ந்தெடுத்து கொள்ள முடியும். இந்த வாய்ப்பு இல்லாமல் மெய்யான ஜனநாயகம் இருக்க முடியாது. ★

# சோவியத் மக்களின் தணியாத தாகம்

சோவியத் நாட்டில் லெனின் நூலகத்திலுள்ள புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் எண்ணிக்கை 2.9 கோடியை எட்டிவிட்டது. ஒவ்வொரு நாளும் சுமார் 3,000 புதிய புத்தகங்கள் அந்த நூலகத்திற்கு வருகின்றன. சோவியத் யூனியனில் இப்போது 360,000 பெரிய நூலகங்கள் உள்ளன; அவற்றை 20 கோடி வாசகர்கள் பயன்படுத்துகின்றனர்;

சோவியத் நாட்டில் 97 சதவிகித குடும்பங்களில் சொந்த நூலகங்கள் உள்ளன; சோவியத் மக்களில் 70 சதவிகிதத்தினர், நாள்தோறும் குறைந்த பட்சம் 1 மணி நேரமாவது படிக்கின்றனர். சோவியத் யூனியனில் ஒவ்வொரு நிமிடத்திலும் 3,300 புத்தகங்களும், ஒவ்வொரு நாளிலும் சுமார் 50 லட்சம் பிரதிகளும், ஒவ்வொரு ஆண்டிலும், 180 கோடி புத்தகங்களும் ஏறத்தாழ 200 பதிப்பகங்களால் வெளியிடப் பெறுகின்றன;

விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்களான மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனினது படைப்புக்கள், பெருமளவில் சோவியத் யூனியனில் வெளியிடப் பெறுகின்றன. மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களின் மொத்தப் பதிப்பு 8.3 கோடி பிரதிகளும், லெனின் நூல்களின் மொத்த பதிப்பு, 29 கோடி பிரதிகளும் வெளிவந்துள்ளன.

தலைசிறந்த ரஷ்ய, சோவியத் மற்றும் அயல்நாட்டு ஆசிரியர்களின் படைப்புக்களும், சோவியத் மக்களது தேசிய இலக்கியங்களின் திறமை சான்ற பிரதிநிதிகளின் படைப்புக்களும், பெருமளவில் வெளியிடப் பெறுகின்றன.

1977-ல் 'உலக இலக்கிய வரிசை'யின் கடைசி மற்றும் 200-வது புத்தகம் வெளிவந்தது. உலக பதிப்பகத் துறையில் முன்னெப்போது காணாத சாதனை இது. 'உலக இலக்கிய வரிசை' யில், 80-க்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த என்றென்றும் தலைசிறந்த 3,235 ஆசிரியர்களின் 25,800 படைப்புக்கள், மொத்தம் 60,291,000 பிரதிகளாக வெளியிடப் பெற்றுள்ளன.

சோவியத் புத்தக வெளியீட்டாளர்கள் ஒரு மாபெரும் புதிய முயற்சியில் இறங்கியுள்ளனர்; அதாவது, பேரிலக்கிய வகையைச் சார்ந்த 100 படைப்புக்களை நூலக வரிசையாக வெளியிட முனைந்துள்ளனர்; அதே வேளையில், குழந்தைகளுக்காக உலக இலக்கியத்தின் 50 படைப்புக்களை நூலக வரிசையாக வெளியிடும் பணியும் நடைபெற்று வருகிறது.

சோவியத் நாட்டில் நாள்தோறும் ஏராளமான புத்தகங்கள் வெளியிடப் பெறுகின்றன; எனினும் வாசகர்களின் தாக்கத்தைத் தணிக்க அவை போதவில்லை. ★

# தகவலும் சமுதாய முன்னேற்றமும்

ஃபியோதர் பிரேயஸ்

சோவியத் வெகுஜனத் தகவல் சாதனங்களின் சாத்தியக் கூறுகள் உண்மையிலேயே அதிகம். அதன் 8000 செய்தித் தாள்கள், சோவியத் மக்களின் 57 மொழிகளில், ஒரே சமயத்தில் 7 கோடி பிரதிகள் அச்சிடப்படுகின்றன. ரேடியோ, டெலிவிஷன் ஒலி — ஒளி பரப்புக்கள், செயற்கைக் கோள்களின் உதவியினல் நாட்டின் எல்லாப் பகுதிகளையும் எட்டுகின்றன.

சோவியத் வெகுஜனத் தகவல் சாதனங்கள் பரபரப்பூட்டும் தன்மை உள்ளவையல்ல; ஆனல் மக்களுக்கு விரிவான, நம்பகமான, உள்நாட்டு வெளிநாட்டுத் தகவல்களைக் கொடுக்கக் கூடியவை. இதைவிட முக்கியமான மற்ருெரு விஷயம் உண்டு: அதாவது, சோவியத் பத்திரிகை அலுவலகங்களுக்கு ஆண்டுதோறும் வாசகர்களிடம் இருந்து சுமார் 6 கோடி கடிதங்கள் வருகின்றன. பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்கள் இந்தக் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப் படுகின்றன.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பிரத்யேகத் தீர்மானம் ஒன்று அண்மையில் சோவியத் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது. அது, பத்திரிகைகளில் வெளியாகும் தகவல்களை மேலும் வளப்படுத்துவது, வாசகர்கள் மற்றும் (டெலிவிஷன், சினிமா) பார்வையாளர்கள் ஆகியவர்களுடன் தொடர்பை மேலும் வலுப்படுத்துவது, கல்விப் பணியை உயர்த்துவது ஆகியவை பற்றியதாகும். சோவியத் வாசகர்கள் பத்திரிகைகளுக்கு ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்கு சந்தா செலுத்தி அவற்றை வாங்கிப் படிக்க விரும்புகின்றனர். வெகுஜனத் தகவல் சாதனங்களின்பால் அவர்கள் கொண்டுள்ள மனப்பான்மையை இது காட்டுகிறது. ஒரு பத்திரிகையின் சந்தாதாரர்கள் அதிகரிப்பது, அந்தப் பத்திரிகைக்கு மக்களிடையே உள்ள ஆதரவைக் காட்டுகின்றது. ஒவ்வொரு குடும்பமும் முதியோர், இளைஞர், குழந்தைகளுக்கான பத்திரிகைகளுக்கு சந்தா செலுத்துகின்றன.

சோவியத் வாசகர்கள்தான் உலகத்திலேயே மிக அதிகமான விஷய தானமுள்ளவர்கள் என்பதை உலக ஆராய்ச்சியாளர்களே ஒப்புக் கொண்டிருக்கின்றனர். பத்திரிகைகள் தகவல்களை நேர்மையான முறையில் சேகரித்து வெளியிடுவதும், நாட்டின் உள்நாட்டுக் கொள்கைகளிலும் அயல்துறைக் கொள்கைகளிலும் மக்களுக்கு உள்ள ஆர்வமுமே இதற்குக் காரணம். சோவியத் வாழ்க்கை முறை அவர்களுக்கு இந்த உணர்வை ஏற்படுத்தி உள்ளது.

முக்கியமான பிரச்னைகள் பற்றிய விவாதங்களில் மக்களை ஈடுபடச் செய்வதில் சோவியத் வெகுஜனத் தகவல் சாதனங்கள் மிகவும் அனுபவம் வாய்ந்தவை. உ.தாரணமாக 1977-ல் அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டம் பற்றி நாடு தழுவிய விவாதம் நடந்த பொழுது, பத்திரிகைகள் ரேடியோ, டெலிவிஷன் முதலியவற்றின் மூலம் லட்சக்கணக்கான மக்கள் அதில் கலந்து கொள்ள முடிந்தது.

குறைபாடுகள், சிலரது மனிதாபிமானமற்ற போக்கு, மற்றவர்களுக்குத் தீங்கு செய்து தங்கள் சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ள முயல்வோரின் நடவடிக்கைகள் சட்டத்திற்குப் புறம்பாக செயல்கள் முதலியவற்றை சோவியத் மக்கள் கண்டால், அவற்றைப் பத்திரிகைகளுக்கு எழுதிப் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றனர்.

சோவியத் மக்கள் பத்திரிகைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது 'தமது பத்திரிகை' என்றே கூறுகின்றனர். பத்திரிகைகள் தனியாருக்குச் சொந்தமாக இல்லாமலிருப்பதும், இதில் வர்த்தக மனப்பான்மை இல்லாதிருப்பதுமே இதற்குக் காரணம். வாசகர்களின் நலன்களில் பத்திரிகைகள் அக்கறை காட்டுவதால் அவற்றை அவர்கள் நேசிக்கின்றனர். சர்வதேச விவகாரங்கள், இலக்கியம், விஞ்ஞானம். கல்வி முதலிய பிரச்னைகள் பற்றிப் பத்திரிகைகளில் வெளியாகும் கட்டுரைகளும், பொது மக்களிடையே அவற்றிற்கு ஆதரவு பெருகக் காரணமாகும்.

## சீனாவின் 'பேரரசு மேலாதிக்கவாதம்'

சாணக்கியன்

தமது மேற்கு ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தின் நோக்கம், 'சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான, இணக்கம், நட்புறவு மற்றும் ஒத்துழைப்பை வளர்த்தல்' என்று சீனப் பிரதமர் ஹுவா—குவோ—பெங் கூறியுள்ளார், இப்பொழுது தெளிவாகத் தெரிகின்றது.

பதற்றத் தணிவு பற்றி பாரிசில் பிரெஞ்சு ஜனாதிபதி விரிவாகப் பேசிய பொழுது, 'பேரரசு மேலாதிக்கவாதம்' பற்றி திரு. ஹுவா மீண்டும் மீண்டும் கூறினார். இது குறித்து எவரும் வியப்படையவில்லை. ஏனெனில், சீனப் பிரதமர் நட்புறவையோ, சமாதானத்தையோ நாடுகிறார் என்று எவரும் உண்மையில் நம்பவில்லை.

அவர் 'ஒத்துழைப்பை' நாடினார் என்பது உண்மையே; ஆனால் எப்படிப்பட்ட ஒத்துழைப்பு அது? சீனாவின் சோவியத் — எதிர்ப்புக் கொள்கைக்கு மேற்கு ஐரோப்பாவிலுள்ள சில கூட்டாளிகளின் ஆதரவை அவர் நாடினார். அண்மையில் ஒரு சிறிய அண்டை நாட்டுக்குப் 'பாடம் கற்பிக்க' முயன்ற பீகிங்கின் பயனற்ற நடவடிக்கையைப் பிரதிபலிக்கின்ற மேலாதிக்கவாதத்தின் வெட்கங்கெட்ட செயலுக்கு மறைமுகமாக உடந்தையாய் இருக்கும் சில கூட்டாளிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அவர் நாடினார்.

திரு. ஹூவா தமது ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தைத் தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளைச் சுமுகப்படுத்துவது பற்றிய சோவியத்— சீன பேச்சுக்களின் பிளீனம் கூட்டத் தொடர்கள் மாஸ்கோவில் தொடங்கின. இந்தப் பேச்சுக்கள் எவ்வாறு, எப்போது முடிவடையும் என்று எவராலும் கூற முடியாது. ஆனால் இந்தப் பேச்சுக்கள் வெற்றி அடைய வேண்டுமானால், மேலாதிக்கவாதம்பற்றி சோவியத் யூனியன் மீது குற்றம் சாட்டுவதைச் சீனா நிறுத்த வேண்டும்; தனது விஸ்தரிப்பு நோக்கங்களையும் அது கைவிட வேண்டும்.

இவ்விரண்டையும் செய்யும் மனநிலையில் பீகிங் இல்லை என்பதை, ஹூவாவின் ஐரோப்பியச் சுற்றுப் பயணம் உள்பட சீனாவின் ஒவ்வொரு அயல்துறை நடவடிக்கையும் காட்டுகின்றன.

சீன நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பெற்ற பிரதமர் ஹூவாவின் அரசியல் அறிக்கையில், பல ஆண்டுக் காலத்தில் முதன் முதலாக, 'சோவியத் திருத்தல் வாதம்' பற்றிய எவ்விதக் குறிப்பும் இல்லை. அந்தக் குறிப்பு இல்லை என்பது, சோவியத் யூனியன் பற்றிய சீனாவின் கொள்கையில் தீவிர மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டுள்ளன என்பதற்கு அடையாளம் ஆகாது. ஏனெனில், 'திருத்தல் வாதம்' என்ற குற்றச்சாட்டுக்குப் பதிலாக 'பேரரசு மேலாதிக்க வாதம்' என்ற சொற்றொடர் அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

சோவியத் யூனியனைப் பொறுத்த வரையில், சீனாவுடன் உறவுகளைச் சுமுகப்படுத்தத் தயார் என்று அது பிரகடனம் செய்துள்ளது. இதற்காக அது விதிக்கும் ஒரே நிபந்தனை, சமாதான சகவாழ்வு மற்றும் வன்முறையைப் பயன்படுத்தாமை என்ற அடிப்படையில் இந்த உறவுகள் அமைந்திருக்க வேண்டும் என்பதாகும். சர்வதேச உறவுகளில் மேலாதிக்கத்தையோ, விசேட உரிமைகளுக்கான கோரிக்கைகளையோ அங்கீகரிப்பதில்லை என்பதை இரு தரப்புக்களும் ஒப்புக் கொள்வது மிக முக்கியம் என்று சோவியத் யூனியன் கருதுகிறது. ஆனால் இதில்தான் சீனா வேறுபடுகின்றது. 'பேரரசு மேலாதிக்க வாதம்' என்ற கூக்குரலுக்குப் பின்னால் தனது விஸ்தரிப்புக் கொள்கைகளை மறைக்க சீனா முயலுகிறது.

★

# ஆத்மா சாந்தி அடையுமா?

கோப்பாய் எஸ். சிவம்

ஆத்மா அந்தச் 'சம்மறி'க்கு வந்த முதல் நாளிலேயே அவனுடைய பார்வை அநுதாபத்தோடு செனிவிரத்னவை ஆழமாக ஊடுருவியது. சாப்பாட்டு மேசையில் அவர்கள் ஆறுபேர் உட்கார்ந்திருந்தார்கள். எல்லோரும் சாப்பாட்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். புதிதாக வந்திருந்த 'மாத்தயா'வை செனிவிரத்னவும் இடையிடையே நோட்டம் விட்டான்.

செனிவிரத்னவின் மெலிந்து வளைந்து எலும்புக் கூடாகிப் போன உடம்பையும், அவனுடைய முகத்தில் எழுதி ஒட்டப்பட்டிருக்கின்ற ஏழ்மையையும் ஆத்மாவின் கண்கள் அளந்தன.

சாப்பிட்டு முடிந்து எழுந்தபோது ஆத்மா கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டான். மற்ற யாவரும் சாப்பாட்டு மேசையிலேயே கோப்பைகளை வைத்துவிட்டு எழுந்து கைகழுவப் போயினர். கோப்பையை வைக்கும்படி திசாநாயக்க சைகை காட்டினன்.

இதற்கிடையில், அவன் கோப்பையைத் தூக்கிக்கொண்டு எழுந்ததைக் கண்ட செனிவிரத்ன,

'மாத்த்யா, கோப்ப அத்தன தியண்ட, மமஹேற தனவா' (கோப்பையை வையுங்கோ, நான் கழுவிறன்) என்று சொல்லிக் கொண்டு அதை வாங்கப் போனன். ஆனல் ஆத்மா மறுத்து விட்டுத் தானே அதைக் கழுவி வைத்தான்.

'நாங்க சாப்பிட்ட கோப்பையை நாங்களே கழுகிறதில்லை என்ன வெட்கம் இருக்கு. நாங்க தானே அதைச் செய்யவேணும்' என்று ஆத்மா சொன்னன்.

'அவனுக்கு நாங்கள் சம்பளம் குடுக்கிறம், அவன் அதைச் செய்தால் என்ன?' என்று குணதிலக சொன்னன்.

'அவனுக்கு நீங்கள் சம்பளம் குடுக்கிறது சரி. ஆனல் அவன் இஞ்சை சமைக்கிறதுக்குத்தான் வந்தவன்; கோப்பை கழுவ அல்ல. உங்கடை சம்பளத்திலை அவன் சீவிக்கிறன் எண்டதுக்காக அவன் உங்கடை எச்சில் கோப்பைகளைக் கழுவ வேணும் எண்ட கட்டாயமில்லை'

'பெரிய காருண்ணியவான்' என்று முணுமுணுத்தான் அன்சாரி. தனது அந்தச் செய்கை மற்றவர்கள் எவருக்கும் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்து மௌனமானன் ஆத்மா.

அன்று மாலை நண்பர்கள் எல்லோரும் விருந்தையில் இருந்து 'கடதாசிக் கச்சேரி' நடத்தும் போது ஆத்மா குசினிக்குள் செனிவிரத்னவுடன் உரையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய கஷ்ட நஷ்டங்கள் குடும்ப நிலைவரங்கள் எல்லாவற்றையும் மிகுந்த அநுதாபத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான் ஆத்மா.

இங்கே அவனுக்கு மாதம் எழுபத்தைந்து ரூபாவும் சாப்பாடும் கிடைக்கிறது. ஒரு பெரிய குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு மிக்க ஒரு மூத்த மகனாக அவன் இருந்தான். இங்கு அவன் சமையல் வேலையுடன், அதற்கு வேண்டிய பொருட்களைக் கடையிலிருந்து வாங்கிவருவது விறகு கொத்துவது போன்ற சகல வேலைகளையும் செய்து வந்தான்.

பல தடவைகளில் அவன் அங்குள்ளவர்களின் உடுப்புக்களைத் தோய்ப்பதையும், அவர்களுக்கு வேண்டிய நேரமெல்லாம் — இரவு பத்து மணிக்கு மேல் கூட சிகரெட், குடிவகை போன்ற தேவைகளுக்காகக் கடைக்கு அலைவதையும் ஆத்மா அவதானித்தான்.

ஆத்மா தனக்காக அவனை அப்படி ஒரு போதும் அலைய வைக்காததுடன் தனது எச்சிற் கோப்பையைக் கழுவவும் விடுவதில்லை. செனிவிரத்னவை ஒரு சக மனிதன் என்ற அளவில் நேசிக்கின்ற மனிதாபிமானம் அவனிடம் இருந்தது.

அன்றைக்கு ஆத்மா எங்கோ வெளியில் சென்றுவிட்டு வந்த போது அன்சார் புறுபுறுத்துக் கொண்டே கடையை நோக்கி நடப்பதைக் கண்டான். வாசலில் மற்றவர்களும் செனிவிரத்னவைத் திட்டியபடி நின்றனர். அன்றைக்கு மாலைத் தேநீர் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான் அதற்குக்காரணம். இரவுச் சாப்பாட்டுக்கான ஆயத்தங்களும் நடப்பதாகத் தெரியவில்லை.

செனிவிரத்ன எங்காவது போய்விட்டானே என்று எண்ணி விசாரித்த தவத்திற்கு,

'கழுதை சுகமில்லையெண்டு படுத்திட்டான்' என்று சலிப்போடு சொன்னான் கந்தசாமி.

அந்தப்பகுதியில் நுளம்புகள் மிக அதிகமாதலால் செனிவிரத்னவுக்கு அடிக்கடி மலேரியாக் காய்ச்சல் வருவதுண்டு.

அன்றும் அப்படித்தானிருக்குமென்று நினைத்துக் கொண்டு அவனைத் தேடிப் போனான் ஆத்மா. அவன் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தான். காய்ச்சல் மிகக் கடுமையாக இருந்தது. தன்னிடமிருந்த 'டிஸ்பிரினைக்' கரைத்துக் கொடுத்துவிட்டுத் தன் போர்வையால் அவனைப் போர்த்துவிட்டு வெளியில் வந்தான் ஆத்மா.

'நாளைக்குத் தானே சம்பளம். அவன்ரை சம்பளத்தைக் குடுத்து அனுப்பிவிடுவம்' என்று அன்சார் சொல்ல அதை ஜோசப்பும் ஆதரித்தான்.

'அது அவசியமில்லை, நாளைக்கெல்லாம் சுகமாயிடும்' என்று அலட்சியமாக அதை மறுத்தான் குணத்திலக.

'ஆனல், இந்த முறை வழக்கத்திலும் பார்க்கக் கடுமையாயிருக்குது' என்றான் கந்தசாமி.

'ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போக வேண்டித்தான் வரும்' என்று சொன்ன ஆத்மா அதற்கான ஆயத்தங்களில் ஈடு பட்டான்.

ஆஸ்பத்திரியில் அவனைப் பரிசோதித்த டாக்டர்கள் நிலைமை சற்றுக் கடுமை என் பதை உறுதிப்படுத்தினர். ஏற் கெனவே பலதடவைகள் அடுத் தடுத்து மலேரியா வந்து சரி யான சிகிச்சைகள் கொடுக்கப் படாததால் அது ஈரலை நன்கு தாக்கிவிட்டது. மூளையிலும் சிறிது பாதிப்பு ஏற்பட்டிருக்க லாம். ஒருநாள் பார்த்துவிட்டு மறுநாள் வேண்டுமானால் பெரி யாஸ்பத்திரிக்கு அழைத்துப் போகலாம் என்று சொன்னார் கள்.

மறுநாள் மாலை—

செனிவிரத்னவுக்கு சம்பளம் கொடுப்பதற்கான ஆயத்தம் நடந்தது. ஆத்மா சொன்னான்—

'இந்தமுறை செனிவிரத்ன வுக்குச் சம்பளம் கூட்டிக் குடுக்க வேணும்'

மற்றவர்கள் முகத்தைச் சுளித்தார்கள்,

'ஏன்?' என்றான் அன்சார்.

'முந்தி இங்கை ஆறுபேர் இருந்த பொழுது மாதம் எழு பத்தைஞ்சு ரூபா கொடுத்தனீங் கள். இப்ப நானும் அமரதாசா வும் வந்தபிறகு— எட்டுப் பேருக்குச் சமைக்கிறதுக்கும் அதே சம்பளம் குடுக்கிறது நியாயமில்லைத்தானே?'

'உந்த நியாய அநியாயங் களெல்லாம் பாக்க எங்களுக்கு ஏலாது. நாங்கள் தருமப் பிர புக்களல்ல' கந்தசாமி முகத்தில் அறைந்தாற் போல் சொன்னான்.

ஆத்மா கவலையுடன் தொடர்ந்தான்.

* * *

❉ 'ஆராய்ச்சி' ஆசிரியர் பேரா சிரியர் நா. வானமாமலை ஜனவரி மாதம் இலங்கை வரு கிறார். இலங்கையில் பல இலக் கியக் கூட்டங்களிலும் கலந்து கொள்வார்.

* * *

'அவன் உங்களுக்காக வேண் டிய எல்லா வேலையளும் செய் யிறான். உங்கடை உடுப்புத் தோய்ச்சுப் போடுறது, எச்சிற் கோப்பை கழுவிறது கூடச் செய் யிறான். அவனுக்கு நீங்கள் இன் னொரு இருபத்தைஞ்சு ரூபா செலவழிச்சால் என்ன குறைஞ்சு போகும்? ஆளுக்கு மூண்டு ரூபா தானே வரும்'

கடைசியாக அவனுடைய விவாதத்திற்குப் பிறகு வேண்டா வெறுப்பாக ஒரு பதினைந்து ரூபா அதிகமாக்கித் தொண் ணூறு ரூபா கொடுக்கச் சம்ம தித்தார்கள்.

உடனடியாக அந்தப் பணத் தையும் எடுத்துக் கொண்டு தானே அந்த நல்ல சேதியை அவனுக்குச் சொல்லிப் பணத் தையும் கொடுக்க வேண்டு மென்று எண்ணியபடி ஆஸ்பத் திரிக்கு விரைந்தான் ஆத்மா.

ஆவலுடன் விரைந்து நுழைந்த ஆத்மாவை செனிவி ரத்னவின் உயிரற்ற உடல் வர வேற்றது: ஒரு கணம் விக்கித்து நின்ற ஆத்மா மௌனமாகக் கண்ணீர் வடித்து அவனுக்கு அஞ்சலி செலுத்தினான்.

செனிவிரத்னவின் ஆத்மா சாந்தி அடைந்தாலும் ஆத்மா வின் ஆத்மா.........?

❉

# தலைநகரில் அங்கும் இங்கும்

நெல்லை க. பேரன்

## 'தகவம்' சிறந்த சிறுகதை எழுத்தாளருக்குப் பரிசளிப்பு விழா

மாதந்தோறும் ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகும் சிறுகதைகளில் சிறந்த கதைக்கு மாதம் இருபத்தைந்து ரூபா பரிசு வழங்கிக் கௌரவித்து வந்த தமிழ் கதைஞர் வட்டம் (தகவம்) சமீபத்தில் கடந்த 75 முதல் 79 மார்ச் மாதம் வரை ஈழத்தில் வெளியான சிறுகதைகளுள் சிறந்ததாக கே. ஆர். டேவிட்டின் 'தனியொருவனுக்கு' என்ற கதையைத் தெரிவு செய்து இதற்கு ரூபா நூறு ரொக்கப் பரிசையும் சான்றிதழையும் வழங்கியது. கொழும்பு விவேகானந்த சபைச் சிறிய மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு திரு. சண்முகசுந்தரம் தலைமைவகித்தார். திருவாளர்கள் சண்முகசுந்தரம், நா. சுப்பிரமணிய ஐயர், ஏ. வி. பி. கோமஸ் ஆகியோரே இறுதித் தேர்வில் பங்கு கொண்டு பத்துச் சிறுகதைகளுள் கே. ஆர். டேவிட்டின் கதையைச் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்தார்கள். இக்கதை வீரகேசரி வாரமலரில் பிரசுரமானது. தகவத்தின் நற்பணியையும் எழுத்தாளர்களின் முயற்சிகளையும் பாராட்டிப் பலர் உரை நிகழ்த்தினர். கே. ஆர். டேவிட் தமது பதிலுரையின் போது தமது சொந்த அனுபவத்தையே இக் கதையில் வடித்ததாகச் சொன்ஞர். கட்டுக் கோப்புகளைத் தகர்த்தெறியும் இலக்கியகாரன் நான் என்று இவர் பெருமையோடு தெரிவித்தார்.

'ஈழத்துத் தமிழ் சிறுகதை இலக்கியம்' என்னும் தலைப்பில் இடம் பெற்ற கருத்தரங்கிற்கு தகவம் காவலர் திரு. வ. இராசையா தலைமை வகித்தார். ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையின் தோற்றம் பற்றி திரு. நா. சுப்பிரமணிய ஐயரும், வளர்ச்சி பற்றி திரு. ஏ. வி. பி. கோமஸ் அவர்களும் எதிர்காலம் பற்றி திரு. செ. கணேசலிங்கனும் உரை நிகழ்த்தினுர்கள். தகவம் செயலர் திரு. வேல் அமுதன் நன்றியுரை கூறினுர்.

## இலங்கை மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்ற நாடக விழா

கடந்த ஆண்டினைப் போன்று இவ்வாண்டும் இலங்கை மத்திய வங்கித் தமிழ் மன்றத்தின் நாடக விழாவும் அகில இலங்கை ரீதியிலான நாடகப் போட்டியும் நவம்பர் 10, 11 ஆகிய இரு தினங்

களிலும் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றன. முதல் நாள் நிகழ்ச்சிகளில் கலையின் கலை மன்றத்தினர் அளித்த மாத்தளை கார்த்திகேசுவின் 'காலங்கள் அழுவதில்லை' ஈஹேர் ஹபீட் நாடகக் குழுவினர் அளித்த 'சாதிகள் இல்லையடி பாப்பா' திருமலை கலைவட்டம் அளித்த கே. கே. மதிவதனனின் 'காதலே நீ வாழி' ஆகிய நாடகங்களும், இரண்டாம் நாள் விழாவில் 'லிட்டில் ஸ்ரோக் குழு' அளித்த அந்தனி ஜீவாவின் 'பறக்காத கழுகுகள்' சிவா நாடக மன்றத்தினரின் தயாரிப்பான பொ. சிவகுருநாதனின் 'உண்மைகள் அழிவதில்லை' என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டன. இவற்றுள் சிறந்த நாடகமாக மாத்தளை கார்த்திகேசுவின் 'காலங்கள் அழுவதில்லை' தெரிவு செய்யப்பட்டது. இரண்டாவதாக 'சாதிகள் இல்லையடி பாப்பா' வும் மூன்றாவதாக 'காதலே நீ வாழி' யும் தெரிவு செய்யப்பட்டன.

இந்த நாடக விழாவில் சிறந்த நடிகராக கே. ஏ. ஜவாஹரும் சிறந்த நடிகையாக ஜெயந்தி அப்புக்குட்டியும் தெரிவாகினர். கார்த்திகேசுவின் நாடகப் பிரதி சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டது. இது மலையக மக்களின் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டது. அந்தனி ஜீவாவின் 'பறக்காத கழுகுகள்' பிரதி எழுத்தாளர்கள் — விமர்சகர்கள் இவர்தம் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டமையும் இந்த நாடகத்தில் மறைமுகமாகப் பல ஈழத்து எழுத்தாளர்களும் விமர்சகர்களும் பிரச்சனைக்குள்ளாவதையும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும். இந்த நாடகத்திற்கு ஆறுதல் பரிசுதான் கிடைத்த போதிலும் இன்றைய எழுத்தாளர்களின் நிலைமையை, சமூகத்தில் அவர்களது பங்களிப்பை, விமர்சகர்களின் தங்கிடு தத்தித்தன்மைகளை நேரடியாகப் பிரச்சாரப் படுத்திய அந்தனி ஜீவாவின் துணிச்சலுக்கு எனது பாராட்டுக்கள். 'காதலே நீ வாழி' நாடகம் அரச நாடகமாகும். இதன் சிறந்த நடிகர்களாக எஸ். ஏ. கந்தசாமி, கௌரி கயல் விழி ஆகியோரும் 'பறக்காத கழுகுகளில்' சிறந்த நடிகர்களாக டொன் பொஸ்கோ, ஆர். மணிமேகலை ஆகியோரும் 'காலங்கள் அழுவதில்லை' யில் சிறந்த நடிகர்களாக மாத்தளை கார்த்திகேசு, மல்லிகா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறப்பு நிகழ்ச்சியாக 'ராஜ்' நகைச்சுவைக் குழுவின் 'சக்கடத்தார்' இடம் பெற்றது. இலங்கை நாடகத்துறையை ஊக்குவிப்பதில் உண்மையான நாட்டங் கொண்ட மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றத்தார் எதிர்காலத்தில் புதிய உத்திமுறைகள் கொண்ட நவீன நாடகங்களையும் அரங்கேற்ற வேண்டும். இன்றைய நாடக வளர்ச்சிப் போக்கையொட்டி நல்ல நாடகங்களைத் தயாரித்து வரும் நடிகர் ஒன்றியம், இலங்கை அவைக் காற்று கலைக்கழகம், யாழ். நாடக அரங்கக் கல்லூரி, நெல்லியடி அம்பலத்தாடிகள் ஆகிய நிறுவனங்களின் தயாரிப்புக்களையும் எதிர்காலத்தில் மத்திய வங்கித் தமிழ் மன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்.

## நடிகர் ஒன்றியத்தின் ஆதரவிலான 'கூடி விளையாடு பாப்பா' சிறுவருக்கான நாடகம்

கடந்த அக்டோபர் 29, 30-ம் திகதிகளில் யாழ். நாடக அரங்கக் கல்லூரியினரின் 'கூடி விளையாடு பாப்பா' என்ற சிறுவருக்கான நாடகம் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. பகல் இரு காட்சிகள் மாணவர்களுக்கும் இரவுக்காட்சி முதியோர்களுக்கும் இடம் பெற்றன. 30-ம் திகதி இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தினர் இந்த நாடகத்தை ஒலிப்பதிவு செய்துள்ளனர். அ. தாசீசியஸ் நெறியாற்கை செய்த இந்த நாடகத்தில் மிருகங்களின் வேடங்களைத் தாங்கிப் பெரியவர்கள் நடித்தார்கள். மாணவர்கள் மிக்வும் ரசித்தார்கள். பெரியவர்களும் குழந்தைகள் ஆனார்கள். நல்ல நாடகங்களை இனங்கண்டு ரசிகர் அவைக்கு அளித்துவரும் நடிகர் ஒன்றியத்தின் முயற்சிகளுக்கு ஈழத்து நாடக ஆர்வலர்கள் மேலும் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

## 'மல்லிகைப் பந்தல்'

கடந்த 20-11-75 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பொரளை ஒலம்ஸ் லேனில் 6-ம் இலக்கத்தில் உள்ள நண்பர்கள் இல்லத்தில் 'மல்லிகைப் பந்தல்' இலக்யெச் சந்திப்பு நடைபெற்றது. திரு. சபா. ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அண்மையில் தமிழகம் சென்று திரும்பிய மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா 'தமிழகத்தில்' இலக்கியப் பிரச்சனைகள் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

திரு: சபா. ஜெயராசா தமது உரையில். தரமற்ற சஞ்சிகைகளைத் தடை செய்ய வேண்டாம் என்று கோரியவர்களே இன்று தடை செய்ய வேண்டும் என்று கோரும் அளவிற்கு நிலைமை இங்கு மாறியுள்ளது. எம். ஜி. ஆர். ஆட்சியின் பின்னர் தமிழகத்தில் எழுத்தறிவு வீதம் மேலும் வீழ்ச்சியடைந்து சினிமாவின் தாக்கந்தான் அதிகரித்து வருகின்றது. எழுத்தறிவு குறைந்த மக்களை இத் திரைப்படங்கள் சுரண்டுகின்ற போதிலும் அதிர்ஷ்டவசமாக இந்திய பல்கலைக் கழக — தொழிலாளர்கள் மட்டத்தில் தரமான சிறு சஞ்சிகைகள் வெளிவருகின்றன. எமது சிற்றிலக்கியச் சஞ்சிகைகளும் தமிழகத்தில் பரவலாகச் செல்ல நாம் வழி வகுக்க வேண்டும் என்றார்.

திரு. டொமினிக் ஜீவா தமது தமிழக அனுபவங்கள் பற்றிச் சொல்கையில், 'நான் நான்காவது தடவையாக இப்போது தமிழகம் சென்றபோது அங்கே இலக்கிய உலகில் புதிய மாற்றங்களையும் வேகத்தையும் காண முடிந்தது. அனேகமாகப் பிரபலமான அத்தனை எழுத்தாளர்களையும் சந்தித்தேன். தி. க. சி., ரகுநாதன், ராஜம் கிருஷ்ணன், பொன்னீலன், வானமாமலை, சமுத்திரம் போன்ற தரமான பலர் எமது நாட்டு எழுத்தாளர்களின் புதிய சிந்தனைகளையும் உத்வேகத்தையும் மதிக்கின்றார்கள். மதுரை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் எமது நாட்டில் கீழ்மட்டத்தில் இருந்துதான் தரமான எழுத்தாளர்கள் உருவாகியுள்ளார்கள் என்பதையிட்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்

கள். ராஜம் கிருஷ்ணன் தமது நாவலான 'வீடு' பற்றிய விமர்சனம் மல்லிகையில் வெளிவந்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி தெரிவித்தார். 'தீபம்' பார்த்தசாரதி தற்போது தினமணி கதிருக்குப் போய்விட்டார். பொருளாதாரப் பிரச்சனைகளால் நல்ல எழுத்தாளர்கள் இலட்சியங்களைக் கைவிட்டுப் பணத்தை நாடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, ஜெயகாந்தன் போன்ற எழுத்தாளர் பக்கத்திற்கு இவ்வளவு காசு என்று வாங்குகிறார்கள், மூக்குத்தி, தேவி போன்ற பத்திரிகைகளும் அங்கு அதிகம் விற்பனையாகின்றன. சமுத்திரம், செயப்பிரகாசம், மதுசூதனன், சந்திரபோஸ். ஜெயந்தன் போன்ற எழுத்தாளர்கள் தரமாக எழுதிவருகிறார்கள். புவியரசு, மேத்தா, சிற்பி, மீரா, பரிணாமன், பொன்மணி ஆகியோர் புதிய வேகத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள். சென்னைக் கடற்கரையில் நவீன நாடகங்களை அக்கினிபுத்திரன் போன்றவர்கள் செய்து வருகின்றார்கள். இலங்கையில் அ. தாசீசியஸ், பாலேந்திரா, சண்முகலிங்கம், நிர்மலா போன்றவர்களின் நாடக முயற்சிகளைப் பற்றித் தமிழகத்தில் நிறைய எடுத்துச் சொன்னேன். எல்லாப் புது முயற்சியாளர்களும் இறுதியில் சினிமாவுக்குள் நுழைவதையே விரும்புகிறார்கள். ஒரு ரூபாப் புத்தகங்கள் தமிழகத்தில் நியாயமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இதனால் பலர் ஆரம்பத்திலேயே நாவல் எழுதி எழுத்துலகில் புகுந்துவிடுகிறார்கள். ஜெயகாந்தனின் 'கல்பனா' இலங்கை நாவல்களையும் பிரசுரிக்கத் தயாராக உள்ளது. கன்னடம், மலையாளம், ஆந்திரப் பிரதேசங்களிலும் நாம் எதிர்பாராத மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. கிராமப் புறங்களில் இருந்தும் கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் இருந்தும் தரமான சிற்றிலக்கியங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. கலை, இலக்கியப் பெருமன்றம், நியூ செஞ்சரி புக் ஹவுஸ் போன்ற நிறுவனங்கள் இலங்கை எழுத்தாளர்களின் நூல்களைப் பிரசுரித்து வருகின்றன. நாகர்கோவில் கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் 25 எழுத்தாளர்கள் மூன்று நாட்களாக ஒரே இடத்தில் கூடி 'வெளிக்களப் பயிற்சி' அமைப்பில் பல தரமான சர்ச்சைகளையும் பொதுசனத் தொடர்புகளையும் ஏற்படுத்திப் பெரும் தாக்கத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். இந்தியாவில் தமிழ் பேசும் முஸ்லீம்கள் மத்தியில் ஒன்றுபட்டுத்தான் 'இலக்கியம்' நடத்துகிறார்கள். இலக்கியத்தில் நாம் முஸ்லீம் எழுத்தாளர், கிறிஸ்தவ எழுத்தாளர் என்று பிரிக்காமல் சிந்தனையுள்ள மனிதர்களாக இனங்காண்பதே சிறப்பாகும்' என்றார்.

இக்கட்டத்தில் எச். எம். பி. முகைதீன் குறுக்கிட்டு 'ஒரு எழுத்தாளனை முஸ்லீம் எழுத்தாளன் கிறிஸ்தவ எழுத்தாளன் என்று பார்க்காமல் அவன் என்ன எழுதுகிறான் என்பதைத்தான் நாம் அவதானிக்க வேண்டும்' என்றார். இதைத் தொடர்ந்து எச். எம். பி. பல முஸ்லீம் இளைஞர்களைத் திசைதிருப்பி விடுவதாக டொமினிக் ஜீவா கண்டனந் தெரிவித்தார். பிரேம்ஜி தலையிட்டு விவாதத்தை நிறுத்தி ஜீவாவைத் தொடர்ந்து பேச வைத்தார்.

திருவாளர்கள் மு. கனகராஜன், திக்குவல்லை கமால், நெல்லை க. பேரன், அந்தனி ஜீவா, லெ. முருகபூபதி ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## நோக்கு

### ஐக்கா

அறந்தை நாராயணனை இதுகாலவரைக்கும் பத்திரிகையாள ராகத்தான் அறிய நேர்ந்திருக்கிறது. 'வாரந்தோறும் வயசாகிறது' அவருக்குள்ளே மறைந்திருந்த கதைகளை எம்முடன் பரிச்சயங் கொள்ள வைத்தது. 'ஐக்கா' மூலம், தம்மை நல்லதொரு நாவலாசிரியராக அறந்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

'எக்ஸ்ட்ராக்கள்' என்று குறிப்பிடப்பட்டு வந்த திரைப்படக் கலைஞர்களுக்கு, தம்மை மற்றவர் 'துணை நடிகர்கள்' என்றும் 'ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்ஸ்' என்றும் அழைக்க வைக்க முடிந்திருக்கிறது — அவர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வாலும் கூட்டுறவாலும். இதற்கப்பாலும் அவர்தம் போராட்டங்களும் பலங்களும் விரிவடைகிற ஒரு களத்தில் 'ஐக்கா' வின் கதை நடக்கிறது.

எம்முன்னே வருகிற இந் நாவலின் நாயகன் ஆசைகள் நிரம்பிய ஒரு கோழை. ஐக்கா பகைப்புலனில் நிற்கிறாள். இந்த இருவரின் இயக்கத்திலும், வெள்ளித் திரைக்குப் பின்னுலுள்ள ஒரு இருண்ட உலகம், தன் முழுப் பரிமாணங்களுடனும் எமக்கும் புலனாகிறது. இந்த உலகிலும் ஒளியைப் பாய்ச்சப் பாடுபடுகிறவர்களில் ஒருத்தியான ஐக்கா, ஒரு துணை நடிகைதான்.

கதை நிகழ்காலம், ஏறத்தாழ இருபத்திரண்டு வருடங்கள். ஒரு சாதாரண மனிதன் தன் வழியேபோய் விழுந்து எழும்பி, யதார்த்தத்தை உணர இந்தக் காலம் தேவையாகலாந்தான் என்றாலும், நாவலின் இரண்டாம் மூன்றும் பாகங்கள் தொய்கிற தோற்றங் காட்டுவதற்கும் இதுதான் காரணமா?

அறந்தை நாராயணனுக்கு சினிமா உலகம் பரிச்சயமும், தொழிற்சங்க அநுபவமும் நிறைய உண்டு என்பது தெரிகிறது. இவ்விரண்டுமில்லாமல் இப்படி ஒரு நாவல் சாத்தியப்பட்டிருக்காது. இவ்விரண்டையும் விட, தேவையான இன்னொன்றும் — கதை சொல்லுந் திறன் — அவரிடம் சரியாகவே பொருந்தியிருக்கிறது என்பது நிரூபணமாகிறது.

இந்நாவலில் குறிப்பிடக் கூடிய இன்னுமிரண்டு அம்சங்கள்: விரசமில்லாமல் பாலுணர்வுப் பிரச்னைகளைக் கதை நீளம் கையாள்வது; மற்றது, தமிழ்ச் சினிமாவிலும் சினிமா உலகிலுங் காணப்படுகிற பைத்தியகாரத் தனங்களுக்கும் போலித்தனங்களுக்கும் கதையோட்டத்துடன் இயல்பாகவே — நவீனமாகவும் — அடிக்கிற நக்கல்கள்.

முந்நூறு பக்கங்களுள்ள இந்நூல், சென்னை — நியூ செஞ்சரி புக் ஹவுஸ் நிறுவனத்தினரின் வெளியீடு.

இந்த நாவலில் இலக்கியம் இருக்கிறதா? சுவை இருக்கிறதா? நாவல் இருக்கிறதா? — என்றெல்லாம் ஆசிரியர் கேட்டிருக்கிறார். நிச்சயமாக இருக்கின்றன; நன்றாகவும் இருக்கின்றன.

சாந்தன்

# சமாதான ஆணை முதல்
# சமாதானத் திட்டத்தின் செயல்பாடு வரை

இகர் சினித்சின்

20-ம் நூற்றுண்டின் முக்கியமான நிகழ்ச்சி, 62 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவில் நிகழ்ந்தது: அதுதான் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி. அதன் எதிரொலி எல்லாக் கண்டங்களிலும், முதலாளித்துவ உலகத்தில் இன்னமும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியானது, மார்க்சிய — லெனினியக் கருத்துக்களின் ஒளி மிகுந்த வெற்றியும், உலகத்தை வெற்றிகரமான முறையில் புனரமைப்புச் செய்வதன் ஆரம்பமும் ஆகும். காலத்தின் மிக முக்கிய பிரச்னையாகிய யுத்தத்தையும் சமாதானத்தையும் பற்றிய பிரச்னைக்கு அடிப்படையான புதிய தீர்வை அது உலகத்தின் முன் வைக்கிறது.

எல்லாப் புரட்சிகளும் யுத்தத்திலிருந்துதான் தோன்றுகின்றன என்ற கருத்தை கம்யூனிஸ்டுகள் மீது சோஷலிசத்தின் எதிரிகள் சுமத்துகின்றனர். ஆனுல் உலகத்தில் கம்யூனிஸ்டுகள் போல் அவ்வளவு உறுதியுடன் யுத்தத்தை எதிர்ப்பவர்கள் வேறு யாரும் இல்லை. யுத்தத்தினுல் சமுதாயப் புரட்சி ஏற்படுவதில்லை என்பதை மார்க்சியம் — லெனினியம் நிரூபித்துள்ளது; சோஷலிசப் புரட்சியானது முதலாளித்துவ அமைப்பினது முரண்பாடுகள், வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் விளைவாகும்; மனித சமுதாயத்தை இயங்க வைக்கும் எதார்த்த விதிகளின் வெளிப்பாடு ஆகும்.

புரட்சிக்கு யுத்தம் தேவையில்லை; மாபெரும் மனிதக் கருத்துக்களைச் செயல்படுத்தவும், அனைவரது சுதந்திரத்திற்கும் நல்வாழ்வுக்கும் உத்தரவாதம் அளித்து, தனி நபருக்கு ஆக்கபூர்வமான வளர்ச்சியும், மகிழ்ச்சியும், நல்வாழ்வும் அளிக்கும் புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கவும் புரட்சிக்கு அமைதி தேவை. இதனுல்தான் சோவியத் யூனியன் மற்றுமுள்ள சோஷலிச சமுதாய நாடுகளது அயல்துறைக் கொள்கையின் அடிப்படையாகச் சமாதானம் அமைந்துள்ளது.

சோவியத் ஆட்சி ஏற்பட்ட நாள் முதல், கம்யூனிஸ்டுகள் சமாதானத்திற்காகவும் படைக் குறைப்புக்காகவும் மாருமல் பாடுபட்டு வருகின்றனர். வெற்றிகரமான சோஷலிசப் புரட்சிக்குப் பின் ரஷ்யாவில் இயற்றப்பட்ட முதல் சட்டம் சமாதானத்தைப் பற்றியதாகும்.

அயல்துறைக் கொள்கை சம்பந்தமான முதல் தஸ்தாவேஜுகள், சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை வலியுறுத்துகின்றன;

இளம் சோஷலிச ஆட்சி எடுத்த எல்லா எதார்த்த நடவடிக்கைகளும் சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டவை ஆகும். 19்-ல் ஜெனேவா மாநாட்டின் பணிகளிலும். ஆயுதங்களையும் படைகளையும் குறைப்பது பற்றி ஆலோசிக்க 1923 டிசம்பரில் மாஸ்கோவில் நடைபெற்ற 6 நாடுகளின் மாநாட்டிலும் கலந்து கொண்டது, இந்த நடவடிக்கைகளில் ஒன்றாகும். ஜெனேவா மாநாட்டில், பொதுப் படைக் குறைப்புப் பிரேரணையை சோவியத் ரஷ்யா முன்வைத்தது. முதலாளித்துவ நாடுகளை, ஒரு குறிப்பிட்ட அளவிலாவது படைக் குறைப்புக் கொள்கையைப் பின்பற்றும்படி செய்ய மாஸ்கோ முயன்றது. ஆனால் இந்த முன் முயற்சிகளை முதலாளித்துவ நாடுகள் அழித்து விட்டன. மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிந்திய ஆண்டுகளில், சோவியத் யூனியனின் அயல்துறைக் கொள்கையானது, சமாதானத்திற்காகவும், படைக் குறைப்புக்காகவும் நடவடிக்கைகளை இடையறாது உறுதியாக மேற்கொண்டு வருகிறது.

சோவியத் அயல்துறைக் கொள்கையின் இந்தக் கேந்திரக் கோட்பாடு, அதன் அரசியல் சட்டத்திலும் இடம் பெற்றுள்ளது.

சமாதானம் பற்றிய ஆணை பிறப்பிக்கப்பட்ட 62 ஆண்டுகளுக்குப் பின், இன்று அதன் வாரிசாகிய சமாதானத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுகிறது.

---

## 'த்ஸ்வ்யெத் ச்சாயா'

'த்ஸ்வ்யெத் ச்சாயா' என்றால், ருஷ்ய மொழியில் 'தேநீரின் நிறம்' என்று அர்த்தம். இந்தத் தலைப்பில் ஒரு சிறுகதைத் தொகுதி, மாஸ்கோ — புனைகதைப் பதிப்பகத்தினரால் இது வெளியிடப் பட்டது. ருஷ்யனில் பெயர்க்கப்பட்ட பதினெட்டு இலங்கைக் கதைகள் இதில் — ஒன்பது தமிழ், ஒன்பது சிங்களம். தலைப்புக்கதை, செ. கணேசலிங்கனுடையது. இதைத்தவிர, அவருடைய 'பிறப்பு' என்ற இன்னொரு கதை, ரகுநாதனுடைய 'பிள்ளையார் அழுதார்', கே. டானியலுடைய 'சோமுகம்' முதலிய மூன்று கதைகள், இலங்கையர் கோனுடைய கதை ஒன்று, வ. அ. இராசரத்தினத்தின் 'தோணி', கனக செந்திநாதனின் 'ஒரு பிடி சோறு' ஆகியவை இதிலுள்ள தமிழ்க் கதைகள். இந்த ஒன்பதையும் மொழிபெயர்த்தவர், அ. இப்ரகிமோவ் ஆவர். மீதி ஒன்பது சிங்களக் கதைகளும், ஜி. அமரசேகர, மார்ட்டின் விக்ரமசிங்க, எச். ரத்னபால, ஜி. பி. சேனநாயக்க, கே. எம். சிரிசேன ஆகியோருக்குரியவை.

சாந்தன்

---

# தொற்று நோயும்
# புதிய ஒருத்தியும்

மாரி மழைக்கரங்கள்
பாய்விரித்த பசும்புல்லில்
பூசொரிந்து
இளமாலைப் பொழுது கமகமக்கும்.
வழிநீள வழிநீள நீட்டி நிமிர்ந்து கிடந்து
தழுவும் கருநிழல்கள் தம்மை
கண்டு கொள்ளாத செட்டோடு
இவள் இட்ட அடி பலர் கண்ணில்.
இவள் எடுத்த அடி பலர் நெஞ்சில்.
மைதானப் புற்பாய் விரிப்புக்கு அப்பாலும்
கொத்தும் கருவிழிகள் தெறிக்கும்,
எழுப்பப்படுகின்ற கொங்கிரீட் விருட்சங்கள் மேலிருந்து
ஏழைத் தொழிலாளர்
வேலைமுடிந்த களைப்போடு இறங்குகின்றார்.
களைத்தென்ன உழைத்தென்ன நாளைய கஞ்சிக்கு
யாரோ வகை சொல்வார்.
அவளுடைய கிராமத்தும் அவலங்கள் இதுபோல,
குப்பி விளக்கும் கொளுத்த வகையின்றி
ஏழைக் கிராமத்தில் எத்தனையோ மாணவர்கள்.
நடைவரம்பின் தோகைமயிலாக
தொடருமிவள்
தான்வந்த கிராமம் வாழ்வுக்காய் போராடும்
சொந்தங்கள் எல்லாம் சொகுசில் மறப்பாளோ?
குளுகுளு அலுவலகம்.
குவிந்து நாறும் பைல் கோர்வை;
மணியடித்தால் சேவகங்கள்.
வாசலிலே தரித்திரங்கள்
வம்பளக்க தொலைபேசி.
கட்பல் கார் இருக்கையிலே
கச்சிதமாய்த்தன்னுடைய
மிதப்புகளில் பதிவுகளில்
மெல்லவிரல் நழுவவிடும் கொழுத்த துணை.
வீட்டில் எடுபிடிக்கும்
தன் மேல்நிலமை காட்டுதற்கும்
மலையகத்தில் பிடித்த வாயில்லா ஒரு சிறுமி ......

இந்தக் கனவு நோய்
இவளுக்கும் தொற்றிடுமோ,
இல்லை என்பேன்.
இவள் ஓர் போராளி என்பேன்,
இந்நாளின் செல்வி:
எதிர்நாளின் இளவரசி.

வ. ஐ. ச. ஜெயபாலன்

எஸ்- ஜெகதீசனின்

## 'அர்த்தங்கள் ஆயிரம்'

அந்தனி ஜீவா

பொருள் புதிது, முறை புதிது, நடை புதிது என்று படித்தவுடன் மனதில் தோன்றியது எஸ். ஜெகதீசனின் 'அர்த்தங்கள் ஆயிரம்'. இந்த நவீன இலக்கியத்துறையில் நம்மவர்கள் பல சாதனைகள் செய்து வரும் இவ்வேளையில் சந்திப்பு இலக்கியம் என்ற புதினத்தை 'அர்த்தங்கள் ஆயிரம்' என்ற பெயரில் லண்டனிலிருந்து விடுமுறையைக் கழிக்க வந்த நம்மவரான எஸ். ஜெகதீசன் புதுமை இலக்கியத்தை சிருஷ்டித்து தந்துள்ளார்.

அவரே இதைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 'பத்திரிகைத் தொழில் மூலம் பலருடன் பழகினேன். பலதரப்பட்டவர்களுடன் உரையாடினேன். ஒரு நாட்டில் முதலமைச்சரை என்னுடன் பேச வைத்ததும், ஒரு நிதி அமைச்சருடன் அளவளாவ வைத்ததும், ஓர் இயக்கத் தலைவருடன் பேட்டிகாண வைத்ததும் பத்திரிகைகள்தான். இதயங்களைப் பேச வைத்த அந்த அநுபவங்களுடன் உறவாடியது எளிதில் மறக்கமுடியாத ஒன்று' என்று கூறும் ஜெகதீசன் அந்த உயிரோட்டமான எண்ணங்களை எழுத்து வண்ணமாக வடித்து நூலுருவில் தந்துள்ளார்'

'அர்த்தங்கள் ஆயிரம்' என்ற நூலில் பலதரப்பட்டவர்களை பேட்டிகண்டு சுவையான விஷயங்களைத் தெரிவிக்கின்றார். வி. என். பி. என்ற மூன்றெழுத்தை ஈழத்து இலக்கிய உலகம் அறியாமலிருக்க முடியாது. கலை, இலக்கிய உலகம் அவருக்கென்று ஒரு தனி 'மௌசு' உண்டு, அவரின் தாயாரைப் பேட்டி கண்டு பல சுவையான சம்பவங்களைத் தெரிவிக்கிறார்.

புதிய, புதுமை இலக்கியமான இந்த நூலில் தமிழ் படித்துத் தமிழ்ப் பெண்ணாக வாழ முயலும் ஜெர்மன் பெண்மணி, சைக்கிளில் உலகம் சுற்றும் வாலிபன், இயந்திர இயக்குனராக லண்டனில் பணிபுரியும் ஓர் இலங்கை டாக்டர், மற்றும் நடிகர், பாடகர், அரசியல் வாதிகள், வர்த்தகப் பிரமுகர் இப்படிப் பல சுவையான சந்திப்புகள் இலக்கியத்தில் புதிய அலைகளான 'நீயுவேவ்' பற்றி எழுத்தாளர் அ. செ. முருகானந்தம், ரஸிகமணி கனக செந்திநாதன். சில்லையூர் செல்வராசன் ஆகியோர் தெளிவான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இன்றைய பத்திரிகைகளில் பல பாலுணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆபாசமான கருத்துக்களையும் படங்களையும் பிரசுரிக்கின்றன. இது பற்றி பண்டிதமணி அவர்களையும், பிரசுரகர்த்தா தி. சா. வரதராசன் (வரதர்) மல்லிகை டொமினிக் ஜீவா, சிரித்திரன் சிவா ஆகியோர் நலமான கருத்துக்களை உதிர்த்துள்ளனர்.

ஈழத்து தமிழ் இலக்கியத் துறையில் நவீன இலக்கியத் திற்கு எஸ். ஜெகதீசன் 'அர்த் தங்கள் ஆயிரம்' என்ற நூலின் மூலம் சந்திப்பு இலக்கியமாக ஒரு புதினத்தை அறிமுகப்படுத் தியுள்ளார். இது போன்று இன்னும் பல நூல்கள் வெளி வரவேண்டும். சுய சரிதம்போல, பயணக் கட்டுரைகள் போல, பல்கலைத் துறைகளிலும் ஈடு பாடு கொண்டவர்களைச் சந் தித்து அவர்களின் அநுபவங் களை, எண்ணக் கருவூலங்களை இப்படி இலக்கியமாகத் தருவது இளைய தலைமுறையினர்க்குப் பயனுள்ளதாக அமையும்.

❉

மல்லிகை

## சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா [மலர் உட்பட] | 15 — 00 |
| தனிப்பிரதி | 1 — 00 |
| இந்தியா, மலேசியா | 20 — 00 |

(தபாற் செலவு உட்பட)

## நம்பிக்கை

எனது எஜமான்
என்மீது
அபார நம்பிக்கை
பணப் பெட்டியை
பக்குவமாய்ப் பூட்டி
வீட்டையும் பூட்டிக்
கேற்றையும் பூட்டி
கேற்றின் திறப்பை
மாத்திரம் தருவார்
அவ்வளவு நம்பிக்கை!

**சி. ரசதாசிவம்**

---

## சுதந்திரம்

நடைபாதைக் கிளிகளிடம்
சேதி கேட்டு நிற்கும்
சோகத்தில்
முனகல் வெளிப்பாடு
மறந்து போகாது
கிளிகளைத் திறந்துவிடு
பறக்கும்— சில செய்திகளைச்
சொல்லிவிட்டு.

**ந. விச்வநாதன்**

---

## ஆறு நாடகங்கள்!
## அரங்கக் குரல்

❉ ஐசன்டைன், மிருணாள் சென், கொடா, குரோசாவா பலகாரங்களல்ல; படத் தயாரிப்பாளர்கள்.

❉ ஓரம் போ இசை, சோரம் போகின்றது.

❉ பாரம்பரியம் பேசிப் பேசிப் பரதத்தைச் சிறை வைக் காதீர்கள். சாளரத்தைத் திறந்து விடுங்கள்; சற்றே புதிய காற்று வரட்டும்.

❉ பிரிஸ்டல் சிகரெட் (பக்கட்) 3-60. ஈழத்துச் சஞ்சிகை 1 00.

❉ தரமான சஞ்சிகைகள் நீடித்த ஜீவிதம்; கலாசாரச் செழுமையின் வழிகாட்டி.

# காலமும் கருத்தும் — இலக்கியம் பற்றிய மார்க்சிய நோக்கு

க. சண்முகலிங்கன்

இக்கட்டுரை ரெஜி சிறிவர்த்தன எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது. தமிழ் இலக்கிய உதாரணங்களைப் புகுத்தி சில மாறுதல்களுடன் எழுதப்பட்டுள்ளது. கட்டுரையின் அடிப்படைக் கருத்துக்கள் யாவும் ரெஜி சிறிவர்த்தனவின் கட்டுரையில் இருந்து பெறப்பட்டவை.

நன்றி: லங்கா கார்டியன்.

இலக்கியம் பற்றிய மார்க்சிய விமர்சனம் பொருளியல் அடித்தளமும் மேற்கட்டுமானமும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. இக்கருத்தின்படி இலக்கியம் சமூக அமைப்பின் மேற்கட்டுமானத்தின் பகுதியாகவும், பொருளியல் அடித்தளத்தால் தீர்மானிக்கப் படுவதாயும் அமையும். சமூக மேற்கட்டுமானத்தைப் பொருளியல் அடித்தளம் தீர்மானிக்கின்றது என்னும் கருத்தை தவருன முறையில் விளக்கும் பொழுது பல சிக்கல்களுக்குள் நாம் மாட்டிக் கொள்ள நேரிடும். 'மனிதர்களின் உணர்வு அவர்களது வாழ் நிலையைத் தீர்மானிப்பதில்லை; அவர்களது வாழ் நிலைதான் அவர்களது உணர்வைத் தீர்மானிக்கிறது' என்ருர் மார்க்ஸ். இக் கூற்றில் 'தீர்மானித்தல்' என்ற சொல் என்ன அர்த்தத்தில் கையாளப் பட்டது?

தீர்மானித்தல் என்ற சொல் பௌதீக விஞ்ஞானத்தில் என்ன பொருளில் உபயோகப்படுகின்றதென்பதற்கு ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு வாயுவின் அமுக்கமும் அதன் வெப்ப நிலையும் அதன் கன அளவைத் தீர்மானிக்கின்றன என்று கூறும்பொழுது, முற்கூறிய இரண்டினதும் அளவுகளைத் திட்டமாகக் கூறினல் கன அளவு இவ்வளவாகத்தான் இருக்கும் என்று துல்லியமாகக் கூறிவிடலாம். வாழ் நிலைதான் உணர்வைத் தீர்மானிக்கின்றது என்ற தொடரில் உள்ள தீர்மானிக்கின்றது (டிரெமின்ஸ்) என்ற சொல்லை மேற்காட்டிய பௌதீக விஞ்ஞான அர்த்தத்தில் புரிந்து கொள்ளக் கூடாது. உதாரணமாக சங்கம் மருவிய காலச் சமூக உறவுகள் இன்னது என்று கூறிவிட்டால், அத்தகைய உறவுகளைக் கொண்டு 'சிலப்பதிகாரம்' தோன்ற வேண்டும் என்று கூறலாமா? 'தீர்மானிக்கிறது' என்ற சொல் மூலம் மார்க்ஸ் கருதியது 'எல்லைகளை வகுக்கிறது' என்பதைத்தான் என்று விளக்கம் கூறுகின்ருர் றேமண்ட் வில்லியம்ஸ். இதன்படி வாழ்நிலைக்கும் உணர்வுக்கும் இடையே உள்ள தொடர்பு நெகிழ்ச்சியானது. கணிதச் சமன்பாடு போல் வரையறுத்துத் திட்டவட்டமாகக் கூறக் கூடியதல்ல.

வாழ்நிலைதான் உணர்வைத் தீர்மானிக்கின்றது என்ற அடிப்படையில், அடித்தளம் — மேற்கட்டுமானம் என்ற உறவைத் திறம்பட விளக்கியவர்களுக்கு உதாரணமாக ஜோர்ஜ் தோம்சனைக் குறிப்பிடலாம். இதே போல் 'தீர்மானித்தல்' பற்றித் தவறான விளக்கத்தைத் தந்த மார்க்சிய ஆய்வாளராக கிறிஸ்ரோபர் கோட்வெல்லை குறிப்பிடலாம்.

பொருளியல் அடித்தளத்திற்கும் மேற்கட்டுமானத்திற்கும் உள்ள உறவை எப்படி விளக்குவது என்ற பிரச்சினையை விட்டு விடுவோம். இலக்கிய விமர்சனம் பற்றிய பிரதான பிரச்சினைகளுக்கு இத்தகைய ஆய்வுகள் தீர்வுகளைத் தந்துள்ளனவா? இலக்கியம் பற்றிய மார்க்சிய நோக்கு இந்த முறையில் மட்டும்தான் இருக்க முடியுமா? வேறு வகையான பார்வைகளுக்கு இடம் இல்லையா? என்பனவே இங்கு நாம் ஆராய விரும்பும் பிரச்சினைகளாகும்.

பொருளியல் அடித்தளமும் மேற்கட்டுமானமும் என்ற கருத்தின் அடிப்படையிலான மார்க்சீய இலக்கிய ஆய்வுகள் பல தமிழிலும் வெளிவந்துள்ளன. இளங்கோ, சேக்கிழார், கோபாலகிருஷ்ண பாரதி, புறநானூற்றுப் புலவர்கள் மகாகவி பாரதி ஆகியோர் பற்றி மார்க்சீய நோக்கில் அமைந்த சிறந்த இலக்கிய விமர்சனக் கட்டுரைகளை கலாநிதி கைலாசபதி எழுதியிருக்கிறார். கலாநிதி சிவத்தம்பி மறைமலை அடிகள் பற்றியும் நாவல் பற்றியும் சிறப்பாக ஆராய்ந்திருக்கிறார். பாரதிபற்றி ரகுநாதன் எழுதிய 'கங்கையும் காவிரியும்' என்ற நூலும் ஏனைய பல கட்டுரைகளும் குறிப்பிடக் கூடியவை நா. வானமாமலையின் 'தமிழர் பண்பாடும் வரலாறும்' என்ற நூல் தமிழில் வெளிவந்த மார்க்சீய ஆய்வு நூல்களில் தலையாயது. எஸ். தோதாத்திரி, தி. சு. நடராஜன், வெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் பல கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

தமிழில் ஆயினும் சரி மேற்கு நாட்டு இலக்கியத்திலாயினும் சரி மார்க்சீய விமர்சகர்களால் பதில் தரப்படாத இலக்கிய விமர்சனம் பற்றிய அடிப்படைக் கேள்விகள் பல உள்ளன. சங்கம் மருவிய கால வாழ்வின் நிலைக்கண்ணாடி சிலப்பதிகாரம் என்ற விளக்கத்தை ஒருபுறம் வைப்போம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னம் எழுதப்பட்ட இந்த நூலை நாம் இன்று ஏன் படிக்கிறோம்? அதனால் நாம் எப்படிப் பாதிக்கப்படுகின்றோம்? நமக்கு அது வெளியிடும் செய்தி என்ன? எங்களுக்கு சமூக வரலாறு பற்றி ஞானமும் அக்கறையும் இல்லை என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறான அக்கறையில்லாத எமக்கு இந்நூல் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' ஆவது ஏன்? இந்தக் கேள்விகளுக்கு இடதுசாரிகளால் கொடுக்கப்படும் விளக்கங்களாக மூன்று கோட்பாடுகளைக் குறிப்பிடலாம்.

1. பழைய இலக்கியங்கள் பிற்போக்குக் கருத்துக்களின் பெட்டகங்கள். அவற்றைக் குப்பையில் வீசுங்கள் என்னும் கோட்பாடு.

2. மாறா மனித இயற்கைக் கோட்பாடு.

3. இலக்கியப் படைப்பின் அழகியல் அம்சம் பற்றிய கோட்பாடு.

முதலாவது வகைக் கோட்பாடு மிக எளிமையானது. சிலப்பதிகாரம், திருக்குறள் இத்தி

யாதி இலக்கியங்களைக் குப்பைத் தொட்டிக்குள் எறிந்து விடுங்கள், இவை வணிக வர்க்கம், நிலப்பிரபுத்துவம் ஆகிய வற்றின் பிற்போக்குப் பண்பாட்டைப் பிரதிபலிப்பவை. ரஷ்ய புரட்சியின் பின்னர், பாட்டாளி வர்க்க கலாச்சாரம் பற்றிய தீவிர வாதக் கருத்துடைய சிலரால், அந்நாட்டில் இக்கருத்து முன்வைக்கப்பட்டது. இதே போன்று சீனாவில் கலாச்சாரப் புரட்சிக் காலத்திலும் பழைய இலக்கியங்களுக்கு எதிரான பிரசாரம் பலமாக இருந்தது. (சேக்ஸ்பியரும், லிபோவும் தற்போது சீனாவில் திரும்பவும் உலாவ அனுமதிக்கப் பட்டிருக்கிறார்களாம்) இலக்கியம் பற்றிக் கட்சியின் கொள்கை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி 1924-ம் ஆண்டில் சோவியத் ரஷ்யாவில் நடந்த விவாதம் ஒன்றை இன்று வாசிக்கும் போது சுவாரசிமாக இருக்கிறது. சொஸ்னேவெஸ்கி இலக்கியம் சம்பந்தமாக மிதவாதக் கொள்கையைக் கொண்டிருந்தார். 'இன்னும் ஐம்பது ஆண்டுகள் கழிந்தாலும் கூட புஸ்கின் நிலைத்து வாழ்வார். அவர் காலத்தால் சாகாதவர்' என புஸ்கின் பற்றி அவர் கூறினார். இக் கருத்து லெனினிற்கும் உடன்பாடானதே. இளைஞர் கம்யூன் ஒன்றிற்கு விஜயம் செய்த பொழுது நடைபெற்ற சம்பவம் ஒன்றை குறுப்ஸ்யோ குறிப்பிட்டிருக்கிறார். இளைஞர்களைப் பார்த்து லெனின் பின் வருமாறு கேட்டாராம் 'நீங்கள் என்ன வாசிக்கிறீர்கள்? புஸ்கின் நூல்களை நீங்கள் படிப்பதுண்டா'

'சே... கிடையாது. அவன் ஒரு பூஷ்வாக் கவிஞன்! நாங்கள் மாயா கோவ்ஸ்கியைத்தான் படிக்கிறோம்' என்று ஒரு இளைஞன் சடாரெனப் பதில் கொடுத்தான். லெனின் புன்முறுவலோடு சொன்னார்:

'நான் நினைக்கிறேன் புஸ்கின் மயாகோவ்ஸ்கியை விடச் சிறப்பானவர்'

மாறாத மனித இயற்கைக்' கோட்பாடு உண்மையில் பூஷ்வா இலக்கியவாதிகளின் கோட்பாடாகும். இளங்கோவும், புஸ்கினும், சேக்ஸ்பியரும் காலத்தால் சாகாது இன்றும் வாழ்வது ஏன்? மனித உணர்வுகள் என்றும் பொதுவானவை. காலம் மாறினாலும் காதல், வீரம், அன்பு என்னும் மனித இயல்புகள் மாறுவதில்லை. மாறாத மனித இயல்பைப் பாடும் இலக்கியம் காலம் கடந்து வாழும் (இக் கருத்தை மு..வரதராஜன் முதல் வெ. சாமிநாதன் வரையான பல விமர்சகர்கள் நூல்களில் விரிவாகக் கண்டு கொள்ளலாம்) மாறாத மனித இயற்கை என்னும் கருத்துப் பொய்யானது. மார்க்சிய தத்துவத்திற்கு எதிரானது. இக் கருத்தையே சில மார்க்சிஸ்டுகள் சொல்ல முனைவது வேடிக்கையானது. பல்வேறு கால கட்டங்களில் குறிப்பிட்ட ஒரே வகையான உணர்வுகள், கருத்துக்கள் இலக்கியங்களில் திரும்பத் திரும்ப வருவதேன் என்பதை விளக்கப் புகுந்த டேவிட் கிரேய்க் 'த கொம்பரேட்டிவ் கொன்டினியூட்டி ஒவ் ஹியூமன் நேச்சர்' என்று கூறுகிறார். இது கலப்படம் எதுவும் அற்ற மனித இயற்கைக் கோட்பாடேயாகும். சமூகத்தில் வாழும் மனிதன் ஹோமோ சேபியன்ஸ் என அழைக்கப்படும் மிருகம்; ஒரு உயிரி, இந்த மிருகம் பல்லாயிரம் வருடங்களாக தனது இயல்பில் அடிப்படையான மாறுதலைப் பெறவில்லை. இதனால் தான் லாஸ்களில் உள்ள எருதுகளையும், பிக்காசோவின் ஓவியங்களையும், ஹோமருடையதும்

லோறன்சுடையதும் கதைகளை யும் நாம் பார்த்தும், படித்தும் மகிழ முடிகிறது. இதன்படி மார்க்சிய இலக்கிய ஆய்வுகள் முழுவதும் தரைமட்டமாகிறது. மனிதனின் உயிரியல் பண்புகள் பல்லாயிரம் ஆண்டுகளாக மாற வில்லை என்பதையும் கடந்த கால இலக்கியங்களால் நாம் எவ்விதம் பாதிக்கப்படுகிறோம் என்பதையும் சம்பந்தப்படுத்து தல் அநாவசியமானது. ஏனெனில் இலக்கியம் மனிதனின் உயிரியல் உந்தல்களை அடிப் படையாகக் கொண்டதல்ல. அது மனிதனின் சமூகப் பண் பாட்டு அனுபவம் பற்றியது; இவை காலத்தோடு இடையறுது மாறிச் செல்பவை.

இலக்கியப் படைப்பின் அழகியல் அம்சங்களே காலத்தால் சாகாமல் அதை நிலைக்க வைப்பவை என்பது மூன்ருவது வகை விளக்கமாகும். இந்த அழகியல் அம்சங்கள் மார்க்ஸிஸ்டுகளின் சமூக ஆய்வுக்குள் அடங்காதவையாக உள்ளன. லெனின் கூட தமது டால்ஸ்டாய் பற்றிய கட்டுரைகளில் இப் புதிரை விடுவிக்கவில்லை; பிற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்த டால்ஸ்டாய் 'மாபெரும் கலைஞன்: மேதை; ரஷ்ய வாழ்க்கை பற்றிய ஒப்பற்ற சித்திரங்களை வரைந்தவன்; உலக இலக்கியத் திற்கு முதல் தரமான படைப் புக்களை ஈந்தவன்' என்று லெனினுல் பாராட்டப்பட்டார். டால்ஸ்டாயின் தரத்தை அளவிட உதவிய அழகியல் அம்சங்கள் எவை? அவர் படைப்புக் கள் எப்படி 'உலக இலக்கியத் தில் முதல் தரம்' ஆயின?

ஜோர்ஜ் தோம்சன் கிரேக்க நாடகம் பற்றியும் ஜோர்ஜ் லூகஸ் 19-ம் நூற்ருண்டு யதார்த்தவாதிகள் பற்றியும் அதிசிறந்த ஆய்வுகளை எழுதியிருக்கிருர்கள். ஆனல் பழைய இலக்கியங்களின் சமூக ரீதியான தோற்றத்தை மட்டும் ஆராய்தல் போதுமா? உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகள் என்ற சூழலில் இலக்கியத்தின் தோற் றத்தை தொடர்புபடுத்திக் காட் டுவதுடன் நின்ருல் எமது பார்வை வரலாற்றை நிராகரிக் கும் தத்துவ நோக்காகத்தான் இருக்கும். இப்படிக் கூறுவது சற்று விசித்திரமாகத் தென்படலாம். "உண்மையில் இத்தகைய நோக்குப்படி இலக்கியத்தை இயக்கமற்ற நிலைத்த ஒரு விடயமாகப் பார்க்கிருேம் அது தோன்றிய சமூகத்தால் அப் படைப்பிற்கு மாருத நிலைத்த அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கொள்கிருேம். உண்மையில் இலக்கியப் படைப்பு ஒன்று வாசகனேடு தொடர்புபடும் பொழுதுதான் அதற்கென ஒரு தனித்த இருப்பு உண்டாகிறது, வாசகர்கள் காலத்தோடு, வரலாற்ருேடு மாறுபட்டு வருவதால் ஒரு குறித்த படைப்புப் பற்றிய வாசகர் தொடர்பும் மாறிமாறிச் செல்லும். இதனல் அப்படைப்பின் அர்த்தமும் காலத்திற்குக் காலம் மாறும்" இதை ஒரு உதாரணம் மூலம் விளக்கலாம்.

'இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம்' என்று கூறும் போது நாம் எதைக் கருதுகின் ருேம்? பன்நூற்ருண்டுகளாக ஏட்டுச் சுவடிகளில் இருந்து வந்த சிலப்பதிகாரம் 1892-ல் ஆண்டில் அச்சுருவில் பதிப்பிக்கப் பட்டது. காலங் காலமாகச் சுவடிகளில் எத்தனை பாடபேதங் கள் நிகழ்ந்திருக்கும்? இளங்கோ அடிகள் எழுதிய உருவிலா நாம் சிலப்பதிகாரத்தை இன்று பார்க் கிருேம்? வஞ்சிக் காண்டத்தை இளங்கோ எழுதவில்லை. பதிகத்

தைப் பிற்காலத்தவர் ஒருவர் எழுதிச் சேர்த்தார் என்ற வாதப் பிரதிவாதங்கள் பற்றியும் நாம் அறிவோம். காலப் போக்கில் நூலின் உருவே மாறி விடுகிறதென்பதை நாம் காண லாம். இன்று சிலப்பதிகாரத்தை நமக்குக் கிடைக்கும் உருவில் நாம் படிக்கும் பொழுது சிலப் பதிகாரம் தரும் செய்தி என்ன? அது பின்வரும் வகையில் ஒன்றாக இருக்கலாம்.

1. இளங்கோ அடிகள் சிலப்பதி காரம் மூலம் வெளியிட விரும்பிய கருத்து.

2. சிலப்பதிகாரம் தோன்றிய காலத்து மக்களுக்கு அது எவ்வித கருத்துக்களைக் கொடுத்திருக்கும்.

3. சிலப்பதிகாரம் இன்றுள்ள வாசகர்களால் படிக்கப் படும் பொழுது என்ன கருத்துக்களைத் தருகின்றது.

மேலே கூறியவற்றுள் முத லாவது பற்றி நாம் திட்டவட் டமாக அறிய முடியாது. சிலப்பதி காரப் பதிகத்தில் இளங்கோ அடிகள் கூற்றாக வருவனவற்றை நாம் உண்மையெனக் கொண் டாலும், ஆசிரியர் கருத்திற்கும் அவர் உண்மையில் எழுதியதற் கும் இடையில் வித்தியாசம் இருக்கலாம் அடுத்ததாக ஒரு ஆசிரியர் தாம் எக்கருத்துக்களை வெளியிட்டிருக்கிறோம் எனத் தமது மனதில் கருதியதற்கும் உண்மையில் எழுதியவற்றிற்கும் இடையில் வேறுபாடு இருக்க லாம். மூன்றாவதாக ஒரு படைப் புப் படைக்கப்பட்டதும் அதன் ஆசிரியர் கருதியதில் இருந்து வேறுபட்டதான இருப்பு அப் படைப்புக்கு உண்டாகிவிடும்.

சிலப்பதிகாரம் தோன்றிய காலத்து மக்களுக்கு அது எத்த கைய கருத்துக்களைக் கொடுத் தது என்பதை நாம் திட்டவட் டமாக அறிய முடியாது. சங்கம் மருவிய கால சமூக வரலாறு பற்றி ஆராய்ந்து இதைக் கண்டு அறிய முனைந்ததும் இதைத் தெளிவாக அறிதல் முடியாது. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த நாவல் ஒன்று பற்றி அக்காலப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் குறிப்பு கள் கொண்டு ஓரளவு அறிய லாம். சிலப்பதிகாரம் பற்றி அவ்வாறு அறிதல் இயலாது.

இன்றுள்ள வாசகர்களுக்கு சிலப்பதிகாரம் என்ன பொரு ளைத் தருகிறது என்பதை மட்டும் நாம் நேரடியாக அறிதல் முடி யும். எனினும் இப்பொருள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையாக இருக்கும். ம. பொ. சி. காட்டும் சிலம்பு மு. வ. காட்டும் சிலம்பு எனப் பல அர்த்தங்களைச் சிலப்பதிகாரம் தருகின்றது. 'அடியும் முடியும்' என்ற நூலில் உள்ள 'சிலப் பதிகாரச் செய்தி' என்னும் கட் டுரையில் தற்காலத்தவரால் சிலம்பின் செய்தி எப்படியெல் லாம் விளக்கப்பட்டுள்ளது என் பதைக் கைலாசபதி ஆராய்ந்து காட்டியிருக்கிறார். அண்ணாத் துரையும், அ. சீ. ராவும், வையா புரிப்பிள்ளையும், வாரியாரும் கம்பராமாயணத்தின் பொருளை தமது சமூக வாழ்க்கை நோக் கின் அடிப்படையிலேயே கண் டார்கள். எனவே இலக்கியத் தின் பொருள் காலத்தாலும் வரலாற்றாலும் மாறுகின்றது அல்லவா? மார்க்சீய இலக்கிய விமர்சகனைப் பொறுத்தவரை இதன் நடைமுறை விளைவுகள் யாவை என்பது பிறிதாக ஆராயப்பட வேண்டியது.

# ஆத்மாவின் ராகமும் உடற் தாளமும்

கே. ஆர். டேவிட்

'நாணல்' கொள்கைகள், மதிப்பான வாழ்க்கையின் படிக் கட்டுக்கள் என்பதைக் கண்ணன் உணராதவனல்ல; உணர்ந்திருந் தும் நாணலைப் போல் வளைந்து கொடுக்க அவனால் முடியவில்லை! எதிலும் அவன் நியாயத்தையும், நேர்மையையும் எதிர்பார்க்கின் ருன்.

உடலை வருத்தி உழைக்கிற நான், நாணலைப் போல் வளைய வேண்டிய அவசியமில்லையென்ற வாய்மை உணர்வு அவனைத் தேக்குமரமாக நிறுத்தி வைத் திருக்கின்றது.

இதனால் அவனுக்குத் தின சரி பட்டினிப் போராட்டந் தான்.

எலும்புந் தோலுமான உட லுடன் பிச்சைக்காரனைப் போல் நிற்கின்ற அவனிடம் இப்படி யொரு வாய்மை நெறி நிறைந் திருக்குமென்றால் யாருமே நம்ப மாட்டார்கள். சில நிமிடங்கள் அவனோடு கதைத்தால் அவனது மனநிலையை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம், அவனது பேச் சில் அவ்வளவு நிதானமிருக்கும்.

கடந்த ஒரு மாதமாக வேலையில்லாமல் திரிந்த அவ னுக்கு, இன்று புதிதாகத் திறக் கப்படும் மின்சார ஓட்டுத் தொழிற்சாலையில் வேலை கிடைத் திருக்கின்றது.

இப்போது பத்துமணி, இன் னும் முப்பது நிமிடங்களுக்குள் இத்தொழிற்சாலைத் திறப்புவிழா நடைபெறும்.

தொழிற்சாலை வாசல் படிக் கட்டோடு கண்ணன் நிற்கின் ருன். அவனோடு, அவனது தாய் அன்னம்மாவும் நிற்கின்ருள்.

தொழிற்சாலை உரிமையா ளர் லிங்கநாதன் தொழிற்சாலை வாசலில் இப்பகுதி நகரபிதா முத்துலிங்கத்தை எதிர்பார்த்து நிற்கின்ருர்.

நகரபிதா முத்துலிங்கந் தான் இத் தொழிற்சாலையைத் திறந்து வைக்கப் போகின்ருர். அங்கு நிற்கின்ற சகலருமே நகரபிதாவைத்தான் எதிர்பார்க் கின்றனர். ஆனால், கண்ணனி டம் மட்டும் அந்த எதிர்பார்ப் புணர்வில்லை!

மார்பு எலும்புக்கூட்டின் மீது இரு கைகளையும் கட்டி மௌனமாக நிற்கும் அவனது பார்வை, இத் தொழிற்சாலை யின் உயிர் நாடியாக இருக்கும் அந்த இயந்திரப் பெட்டிமீது படிந்திருக்கின்றது.

தொழிற்சாலையைத் திறந்து வைக்கப் போகின்ற நகரபிதா முத்துலிங்கம், இப்போது இங்கு

கூடிநிற்பவர்கள் சகலருமே திறப்புவிழா முடியப் போய்விடுவார்கள்...... அதன்பின் கண்ணனோடு ஒத்துழைக்கப் போவது அந்த இயந்திரப் பெட்டிதான். அதனால்தானோ என்னவோ, தோழமை உணர்வேபடு அந்த இயந்திரப் பொட்டியை அவன் பார்க்கின்றான்.

கண்ணன்—

இவன் இந்த ஊரையே பிறப்பிடமாகக் கொண்டவன். இவனது ஐந்தாவது வயதில் 'சம்பிரதாய முறைப்படி' பாடசாலையில் 'ஏடு' படித்து அதன் பின் இரண்டு வருடங்கள் பாடசாலைக்கு 'அஞ்ஞாப் பிரயாணம்' செய்து......... அடுத்த மூன்று வருடங்கள் வீட்டோடு நின்று, பத்தாவது வயதில் ஒரு ஒட்டுத் தொழிற்சாலையில் சேர்க்கப் பட்டான்.

இப்போது கண்ணனுக்கு முப்பது வயது. அன்றுதொடக்கம் இன்றுவரை அதே தொழிலைத்தான் செய்கின்றான்.

காலம் கற்பிக்கின்ற அனுபவங்கள் மரணிப்பதில்லையென்று கூறுவார்கள். கடந்த இருபது வருடங்களாக காலம் 'திணித்த' தொழில் அனுபவத்தின் தொகுப்பு...... 'சிறந்த ஒட்டுக்காரன்' என்ற புகழ்ப் பட்டயத்தைத் தாங்கி நிற்கின்றான்.

இவனது திறமை, புகழ் என்பவைகளைப் பயன்படுத்தி முன்னேறிய முதலாளிகள் பலர். ஆனால், கண்ணன் இன்னும் ஏணியாகவே இருக்கின்றான். இவன் எந்தத் தொழிற்சாலையிலும் நிரந்தரமாக நிற்பதில்லை.

காரணம் இவனது நேர்மை!

தொழிலில் முதலாளியால் தினசரி அரங்கேற்றப்படும் 'தப்பிலித்தனமான' நாடகங்களுக்கு இவன் இடங்கொடுப்பதில்லை. இதனால் இவன் தானாக விலகிக் கொள்வதுமுண்டு விலக்கப்படுவதுமுண்டு.

'இஞ்சை தொழில் செய்ய வாற சகலரையும் நான் ஒருத்தன் ஏமாற்ற வேணும், அதிலை வாற ஊதியத்திலை நீ ஒருத்தன் கொழுக்க வேணும்? இப்படி நேரடியாகவே கண்ணன் முதலாளியிடம் கோட்டுவிடுவான்.

தொழிலில் நேர்மை நெறி பிறழ்வதென்றால், கண்ணன் விஸ்வரூபம் எடுத்து நிற்பான்.

செய்யும் தொழிலே தெய்வம். இது அவனது ஆத்மாவின் ராகம்!

முகமனுக்காகச் செய்யப்படும் 'உடற் தாளங்கள்' அவனது பரம வைரி!

நேரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. நகரபிதா இன்னமும் வரவில்லை. 'கண்ணு' அன்னம்மா கூப்பிட்டாள்.

'என்னம்மா.....'

'......நான் சொல்லுறனெண்டு கோவிக்காதை, இஞ்சையாவது முதலாளியோடை போட்டி போடாமல் நிக்கப் பார்......' அன்னம்மா இரகசியமாகக் கண்ணனுக்குக் கூறுகின்றாள். கண்ணன் எதுவுமே பேசவில்லை.

'கண்ணன்'

'என்னம்மா......'

'என்ன பேசாமல் நிக்கிறாய்'

'என்னத்தைப் பேசிறது...'

'...நான் சொன்னது கேட்டிதா......'

'கேட்டிது......'

'சரிதானே......'

'......அம்மா என்ரை குடும்பத்தைக் காப்பாத்த நேர்மையாய் உழைக்கிற நான்... இன்

ஒருத்தனுக்காக நேர்மை தவறி நடக்கலாமா......'

'கண்ணு...... உப்பிடியெல்லாம் கதைக்காதை? முதலாளி சொல்றதுபோலே நட' பசித் தணலில் அவிகின்ற இரைப்பை வேதனை அனுபவத்தால்தான் அன்னம்மா பெற்றவளாக இருந்தும் தன்னை நேர்மை தவறச் சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட கண்ணன் மௌனமாக நிற்கின்றான்.

அன்னம்மாவும் எதுவும் பேசவில்லை.

நகரபிதா முத்துலிங்கத்தின் கார் வருகிறது. முதலாளி லிங்கநாதன், அவரது மனைவி, பிள்ளைகள் ஆளுக்கொரு மாலையுடன் நிற்கின்றனர்.

நகரபிதாவின் கழுத்து மாலைகளால் மறைகின்றது. வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட கத்திரிக்கோலை முதலாளி லிங்கநாதன் இரண்டு கைகளாலும் நீட்டுகிறார். நகரபிதா கத்திரிக்கோலை இரண்டு கைகளாலும் எடுத்து வெள்ளை நாடாவை வெட்டுகிறார்.

கோர்வை வெடி வெடித்துச் சின்னாபின்னமாகிறது, கரகோசம், புகைப்படக்காரன் பம்பரமாகச் சுழல்கின்றான். நகரபிதா முன்னே செல்ல, சகலரும் அவரைப் பின் தொடர்ந்து தொழிற்சாலைக்குள் செல்கின்றனர். கோலாகலமான திறப்புவிழா...

அவன்— கண்ணனும் அன்னம்மாவும் அதே இடத்தில் நிற்கின்றனர். அந்த இயந்திரப் பெட்டிக்கு மட்டும் கண்கள் இருந்தால்...... நிச்சயமாக கண்ணனின் நிலையைப் பார்த்துக் கண்ணீர் சிந்தியிருக்கும்!

தொழிற்சாலையின் நடுவே புதுச் சட்டி வைக்கப்பட்டு பால் விட்டு எரிக்கப்படுகின்றது. பால் பொங்கி வழிய வேண்டும், அதிலும் கிழக்குப் பக்கமாக வழிந்தால்தான் சிறப்பு! கிழக்குப் பக்கமாக வழியவேண்டும் என்பதற்கும் ஒரு காரணம் கூறப்படுகிறது.

கிழக்குப் பக்கத்தில் உதிக்கின்ற சூரியன், வளர்ந்து எப்படிப் பிரகாசிக்கின்றானோ அதேபோல், கிழக்குப் பக்கமாகப் பால் பொங்கி வழிந்தால்— தொழிற்சாலையும் பிரகாசிக்கும் என்பதற்கு அறிகுறியாகும்.

நகரபிதா உட்பட சகலரும் பாலையும் சட்டியையும்தான் பார்க்கின்றனர்.

அவனுக்கு இவைகளில் நம்பிக்கையில்லை. அவன் தன் கைகளைப் பார்க்கின்றான். இருபது வருடங்களாக இரும்பையே பிடித்து, இரும்பாகி விட்ட அவனது கைகள், அவற்றில்தான் அவனுக்கு நம்பிக்கை.

பால் கொதித்து பொங்க ஆரம்பிக்கின்றது. சகலரது கண்களும் இமைப்பதை மறக்கின்றன. பால் பொங்கி எந்தப் பக்கம் வழியுமோ என்ற ஏக்கம்.

'முருகா... பால் பொங்கி கிழக்குப் பக்கமாகத்தான் வழிய வேண்டும்' கண்ணனின் தாய் அன்னம்மா தன்னைமறந்து கூறுகின்றாள்.

'அம்மா......'

'என்ன கண்ணன்.....'

'நீ பயப்பிடாதை. பால் கிழக்குப் பக்கமாகத்தான் வழியும்' கண்ணன் நிதானமாகக் கூறுகின்றான்.

'உனக்கு என்னண்டு தெரியும்......'

'அடுப்பிலே இருக்கிற சட்டியைப் பார், அது கிழக்குப் பக்கமாகத்தான் சரிஞ்சிருக்கு...... சரிஞ்சிருக்கிற பக்கந்தானே பால் வழியும்'

'சும்மாயிரடா......'

'ஏனணே......'

'முதலாளியின்ரை காதிலே விழப்போகுது'

'விழுந்தால் என்னணே...... கண்ணுல் காணிற உண்மையைத் தானே சொல்றன்'

'எடேய்...... உனக்கேனடா வீண் வம்பு'

'இதிலே என்னணே வம்பிருக்கு'

'கண்ணன் நான் சொல்றதைக் கேள்; உனக்கு சம்பளம் தாற முதலாளியிட்டே நல்ல பேர் எடுக்கப் பார்'

'அந்த நல்ல பேரையும் நேர்மையான முறையில் எடுக்க வேணும்'

'ஏனடா உலகத்திலே வாழ்றவை எல்லாம் நேர்மையாய்த்தான் வாழுகினமே'

'நேர்மையாய் வாழமுடியும் எண்ட தைரியம் எனக்கிருக்கு. பிறகேன் நேர்மை தவறி நடக்க வேணும்'

'சும்மாயிரடா......'

இவர்களின் பேச்சு இரகசியமாகவே நடந்து முடிகின்றது.

அடுப்பில் பொங்கிய பால் கிழக்குப் பக்கமாகவே வழிகின்றது. ஆவலில் விரிந்திருந்த கண்களில் ஆனந்தம் பளிச்சிடுகின்றது.

லிங்கநாதன் தனது கையால் ஒரு கிளாசில் பாலை ஊற்றி, நகரபிதாவிடம் நீட்டுகின்றார். நகரபிதா அதை வாங்கி காலுக்குமேல் கால் போட்டு, சர்வ சாதாரணமாகவும்—ஆனல் மிகவும் நாகரீகமாகவும் அருந்துகிறார். பால் சகலருக்கும் வழங்கப்படுகின்றது. கண்ணனும் அன்னம்மாவும், சகலரது வாய்களும் பாலைச் சுவைத்தது—'பொச்சடிக்கும் போது' இவர்களின் வாய்கள்......

வழமைபோம் வாய்கள் 'பொச்சடிக்கின்றன' அடுத்து—நகரபிதா அங்குள்ள இயந்திரப் பெட்டியை இயக்கி, தொழிலை ஆரம்பிக்க வேண்டும்.

நியாயப்படி இந்த இயந்திரப் பெட்டியை இயக்குகின்ற தகுதி கண்ணனுக்குத்தான் உண்டு. ஆனல்...... சமுதாய நியதிப்படி, நகரபிதா அத்தகுதிகளைப் பெற்று நிற்கின்றார்.

புதுமைதான்! ஆனல் புதியதல்ல.

நகரபிதா இயந்திரத்தை இயக்கத் தயாராகின்றார்.

'கண்ணன்......' முதலாளி அழைக்கின்றார்; கண்ணன் இயந்திரத்திற்கருகே வந்து நிற்கின்றான். நகரபிதா இயந்திரத்தை இயக்குகின்றார்; கண்ணன் இரண்டு இரும்புத் துண்டுகளை வைத்து ஒட்டுகிறான்.

கரகோசம், புகைப்படக்காரனின் மின்வெட்டுக்கள்!

நகரபிதா புறப்படுகின்றார்: முதலாளி லிங்கநாதனுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன: கௌரவத்தைக் காப்பாற்றச் செய்யப் படுகின்கிற உடந்தாளங்கள்!

கண்ணன் எந்த அன்பளிப்பும் செய்யவில்லை. அவனுக்கென்று சில கௌரவங்கள் இல்லாமலில்லை. ஆனால் பிறரிடமிருந்து அவன் கௌரவத்தை எதிர்பார்ப்பதில்லை.

அன்பளிப்புக் கொடுக்கும் படலமும் முடிவடைந்து, அநேகமானவர்கள் வெளியேறி விட்டனர். லிங்கநாதனின் நெருங்கிய உறவினர்கள் மட்டும் நிற்கின்றனர்.

'கண்ணன்......' முதலாளி கூப்பிடுகின்றார்!

'ஐயா......'

'இந்தா......' ஒரு வெற்றிலை மடிப்பை முதலாளி கண்ணனிடம் நீட்டுகின்றார். கண்ணன் இரண்டு கைகளாலும் அதைப் பெற்றுக்கொண்டு, அந்த இயந்திரப் பெட்டிக்கருகில் வந்து வெற்றிலை மடிப்பை அந்தப் பெட்டிக்கு முன்னால் வைத்து மிகவும் பயபக்தியோடு, தனது இரண்டு கைகளாலும் அந்த இயந்திரப் பெட்டியைத் தொட்டு ... கடவுளைத் தொடுவது போல்...... தனது கண்ணில் ஒற்றி...... கண்களை மூடி......... கும்பிடுகின்றான்.

முதலாளி, நகரபிதாவுக்கு மாலை போட்டுக் கும்பிட்டார்... வந்திருந்த விருந்தினர்கள் முதலாளிக்கு அன்பளிப்புக்கள் கொடுத்துக் கும்பிட்டனர்......

ஆனால், இவன் கண்ணன்... உயிரோ, உணர்வோ அற்ற அந்த இயந்திரப் பெட்டியைத் தொட்டுக் கும்பிடுகின்றான்!

சகலருக்கும் ஆச்சரியம்! அன்னம்மா ஏங்கிப்போய் நிற்கவும்... ...

கண்ணனின் பாராட்டுதலை எதிர்பார்த்த முதலாளி ஏமாந்து போய் நிற்கிறார்.

இயந்திரப் பெட்டியை வணங்கும் கண்ணன் அங்கிருந்து தாயிடம் வருகின்றான்.

'கண்ணன்.....'

'என்னம்மா.. ...'

'முதலாளி நிக்கிறார்......'

'நிக்கட்டன்......'

'டேய்..... அவரைக் கனம் பண்ணாமல் வாறியே இது சரியா'

'என்ன் காரணத்துக்காக முதலாளியைக் கனம் பண்ணிறது'

'உனக்கு எவ்வளவு திமிர்'

'அம்மா... இது திமிரில்லை'

'பிறகென்னடா'

'அம்மா, இது என்ரை உயிரோடை கலந்த தொழில் பக்தி'

'என்னடா சொல்லுறாய்...'

'அம்மா... நகரபிதா, முதலாளி, விருந்தினர்கள் இவர்களெல்லாம் மாறி மாறிக் கும்பிட்டினம், அதிலை எந்தப் பக்தியுமில்லை. எல்லாம் வெறும் போலி வேலை. ஆனால் நான் கும்பிட்டது, நான் வேலை செய்யப்போகும் ஆயுதத்தை. செய்யிற தொழில்தானம்மா தெய்வம். அதிலை எந்தப் பொய்யும் இல்லை' கண்ணன் எந்தப் பயமுமின்றிப் பலமாகவே கூறுகிறான். அன்னம்மா மௌனமாக நிற்கின்றாள்.

அவளது பார்வையில்—கண்ணன் தன் மகன் என்ற உணர்வைவிட, தான் ஒரு உத்தமமான தொழிலாளியின் தாய் என்ற பெருமை உணர்வு பளிச்சிடுகின்றது!

# வித்துவச் செருக்கல்ல—
# விழல் அகம்பாவம்!

டொமினிக் ஜீவா

மேடையில் வயலின் இசைக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இடம்: யாழ்ப்பாண வீரசிங்க மண்டபம். 26-11-79 மாலை, ஏராளமான ரஸிகப் பெருமக்கள் கூடியுள்ளனர். பல பிரபல யாழ்ப்பாணத்துச் சங்கீத வித்துவான்கள் வயலின் இசையைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். வயலினில் இசை பொழிந்து கொண்டிருப்பவர் தமிழ்நாடு அரசினர் இசைக் கல்லூரி அதிபர் பேராசிரியர் ரி. என். கிருஷ்ணன். கச்சேரி ஆரம்பித்துச் சில நிமிடங்கள்தான் ஆகியிருக்கும். திடீரென்று அவருக்கு அணித்தாகத் தாளம் போட்டுக் கொண்டிருந்த ஈழத்து வித்துவானை இடைநடுவில் நிறுத்திவிட்டு வேறொருவரைத் தாளம் போட அமர்த்திக் கொண்ட காட்சியை அவதானித்தபோது என் நாடி நரம்பெல்லாம் என்னவோ செய்து கொண்டு வந்தது.

இன்னொரு காட்சி.

சுகததாஸா விளையாட்டு அரங்கில் திரு. டி. எம். சௌந்தரராஜனின் இசைக் கச்சேரி. நமது வர்த்தக ஒலிபரப்பு அறிவிப்பாளர்கள் அறிவிப்புச் செய்ய முன் வந்தார்களாம். உடனே அதை நிராகரித்த டி. எம். எஸ். 'எனக்கு யாருமே அறிமுகம் தேவையில்லை; நானே எனக்குப் போதும்!' என அலட்சியமாக அவர்களை ஒதுக்கினாராம்.

பத்திரிகைச் செய்தி கூறும் தகவல் இது.

இத்துடனல்லாது அவர் ஏறிய ஒவ்வொரு மேடையிலும் அவர் நடந்து கொண்ட முறை மனதில் எரிச்சலை மூட்டியது. அது பற்றி இங்கு விவரிக்கத் தேவையில்லை.

இந்த இரண்டு நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நாம் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய பாடங்கள் என்ன?

இந்த நாட்டுக் கலைஞர்கள் யாவரிடமும் நான் கேட்கும் கேள்வி இதுதான். "இப்படியே நாம் மாற்றானின் அசட்டுத் திமிர் அகம்பாவத்தனத்திற்குப் பாதபூஜை செய்யப் பழக்கப் படுத்தப்படப் போகின்றோமா? அல்லது சொந்தக் காலிலே நின்று, சொந்தச் சுய கௌரவத்தைப் பாதுகாக்கப் போகின்றோமா?

தரமான கலைஞனை, மேதை இசைஞனை, அற்புதமான கவித்துவகாரனை — அவன் எங்கிருந்து வந்தாலும் நாம் மதித்துக் கௌரவிக்க வேண்டியது முக்கியம்தான் — அதற்காகத் தார்மீகப் பண்பையே இழந்து, வருபவனின் தன்னடக்கமற்ற, பண்புக் குறைவான, அலட்சிய மனோபாவத்திற்குப் பணிந்து விட்டுக் கொடுப்பதென்பது கடைசியில் கலைச் சீரழிவிலேயே நம்மைக் கொண்டு விட்டுவிடும்.

கடைசியில் இது கலை வளர்ப்புக்குப் பதிலாகத் திமிர் வளர்ப்பில் வந்து முடியும்.

இந்த நாட்டுக் கலைஞர்களை மனதார நேசிப்பவன் என்கின்ற முறையில் இந்தத் தேசிய அவமானத்தை என்னால் பார்த்துக் கொண்டு பொறுமையாக இருக்க முடியவில்லை. எனவே இதற்கொரு வழி செய்ய வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையான கலைஞர்கள் தமக்குள் தாமே ஒரு சபதம் செய்து கொள்ள வேண்டும். நம்மை மதிப்பவனை மாத்திரமே நாம் மதிக்கப் பழக வேண்டும், கண்ட குப்பையனுக்கெல்லாம் பின்னால் ஓடி முகத்தைக் காட்டாமல், தரத்தை அறிந்து, பண்பை உணர்ந்து, மதிப்புத் தெரிந்து, மதிக்கத் தெரிந்து நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு மாத்திரமே போக வேண்டும் என்ற முடிவுக்கு நாமனைவரும் வருவோமாக இருந்தால் இந்தச் சில்லறைத் தனங்கள் நமது மண்ணில் இனிமேல் நடைபெறாமல் தவிர்ப்போம். குறைந்த பட்சம் இந்தக் கட்டுப்பாட்டையாவது நாம் கடைப்பிடிப்போமா?

நாங்கள் கலைத்துவ ரஸனையில் சும்மா ஏனோ தானோக்கள் அல்ல. கிட்டப்பா காலத்தில் இருந்து கர்னாடக இசையை ரஸிப்பதில் ஒரு தொடர் பரம்பரையைக் கொண்டுள்ளவர்கள் நாங்கள். இசை ஞான மேதை தவில் வாசித்த மண் இந்த மண்.

முதிர்ச்சியும் ஆழ அகலமான இசை ஞானப் பயிற்சியும் கொண்ட பல கலைஞர்கள் இந்த மண்ணில் தோன்றியிருக்கின்றனர்.

நாங்கள் மற்றவர்களைக் கௌரவிக்கின்றோம் என்றால் நமது மண்ணுக்கேயுரிய விருந்தோம்பல் பண்புக்குரிய அன்புணர்வின் வெளிப்பாடே தவிர, சிலர் அகம்பாவ உணர்வுடன் நினைக்க முயலும் அடிவருடித்தனமோ, தகைமையற்ற தன்மையோ காரணமல்ல என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்வது அவர்களுக்கே நல்லது; அவர்கள் நம்பும் கலைக்கும் நல்லது.

நமது நாட்டில் சில இழிச்சவாயர்கள் இருப்பது உண்மைதான். இன்னும் சில சந்தர்ப்பவாதிகள், புகழ் விரும்பிகள், மேடையை ஓசியில் பயன்படுத்தித் தம்மைத் தாமே அறிமுகப் படுத்திக் கொள்ளும் 'ஞானோதய சீலர்கள்' நம்மிடையே இல்லாமல் இல்லை.

அவர்களுக்குக் கலையைப் பற்றியும் கவலையில்லை, கலை ரஸனை பற்றியும் அக்கறையில்லை.

அவர்களுக்கெல்லாம் தம்மைப் பற்றித்தான் கவலையெல்லாம்; தமது சுயவிளம்பரத்தைப் பற்றித்தான் அக்கறையெல்லாம்.

இப்படியானவர்களைப் பொது மக்கள் இனங்கண்டு வைத்திருக்கின்றனர். எனவே இவர்கள் உண்மைக் கலைஞர்களாக இருக்க முடியாது. இது உண்மைக் கலைஞனுக்குரிய இலட்சணங்களுமல்ல.

மேடைகளில் நடக்கும் அசிங்கங்களைப் பார்த்துப் பார்த்து தமக்குள் தாமே வெந்து வெதும்பிக் கொண்டிருக்கின்றனர் தரமான கலைஞர்கள்.

இந்த நியாயமான மனக் கொதிப்பு ஒருநாள் பொது மேடையில் வெடித்துக் கக்கத்தான் போகின்றது.

இதைச் சரியான பாஷையில் புரிந்து கொண்டால் எதிர்காலத்திற்கு ரொம்பவும் நல்லது.

## தந்தக் கோபுரத்தில் ஒரு வரலாற்றுப் பாடம்

மாலை வெய்யில்
மணி முடிதரித்த
மேற்கு வானில்
ஒளிச்சிறு வெள்ளம்.

அலுப்பும் சலிப்பும்
உடலைத் திருகக்
கசங்கிய காகிதம் —
உடலும் மனமும்.

எங்கள் இராமத்
தோட்டப் பயிர்கள்
குந்தியிருந்து
காய்களைச் சிந்த
எத்தனை கற்களை
அகழ்ந்து அகழ்ந்து
இச்சிறு பூமியை
அழகுறச் செய்தோம்.

எங்களூரின்
சரித்திரம் எழுதியோர்
பழைய கற்களைப்
பார்த்துப் பார்த்து
இனங்களைப் பகைக்கும்
சரித்திரம் படைத்தனர்.

எங்களைப் போல
எத்தனை ஊர்களில்
எத்தனை மொழிகளில்
எத்தனை இனங்களிற்
கற்களில் நசிந்து
உழைப்பவர் கலங்குவர்.

சபா. ஜெயராசா

## மல்லிகை

மல்லிகை மாசிகை சும்மா படித்து விட்டுப் போகும் சஞ்சிகை அல்ல. அது எதிர்கால இலக்கியத் தேவைக்காக இன்று வழி சமைக்கும் இதழ். எனவே ஓர் இதழைக் கூடத் தவற விட்டு விடாதீர்கள். உங்களது கவனக்குறைவு தரமான ஓர் இதழைத் தவற விட்டு விடக் கூடும். பின்னர் அதைச் சேர்த்து முழுத் தொகுப்பிலும் இணைக்கலாம் என அசட்டையாக இருந்தீர்களானால் அது நடைபெறுமலே போகவும் கூடும். எனவே ஒவ்வொரு இதழையும் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் சேமித்து வைக்கப் பாருங்கள்.

தமது அலட்சியத் தனத்தால் தவற விட்ட இதழ்களைக் கேட்டுப் பலர் எம்முடன் தொடர்பு கொள்ளுகின்றனர். சிலருக்கு உதவ முடிகிறது. பலருடைய அபிலாஷை நிறைவேறுவதில்லை.

இது எச்சரிக்கையல்ல; அன்பு வேண்டுகோள்!

குறிப்பாக உயர் கல்வி மாணவர்களும் தரமான இலக்கியச் சுவைஞர்களும் பிரதிகளைப் பத்திரப்படுத்த வேண்டும் எக் காரணதைக் கொண்டும் இரவல் கொடுக்கக் கூடாது.

மல்லிகை இதழ்களின் பெருமை உடன் நிகழ் காலத்தில் உடனடியாகத் தெரியவராது போகலாம். காலம் செல்லச் செல்லத்தான் இதனது உள்ளடக்கப் பெருமை கொஞ்சம் கொஞ்சமாகப் புரியும். அதைப் பூரணமாகப் புரிந்து கொள்ளக் கூடிய காலத்திற்க கவாவது இதழ்களைப் பத்திரப்படுத்துங்கள் பின்னர்தான் இந்த அறிவிப்பின் முழுக் கருத்தும் உங்களுக்கு விளங்கும்,

— ஆசிரியர்

# ஒரு கடிதம்

ஆண்டு மலர் பற்றி நான் சில வார்த்தைகள் எழுதவேண்டும் என்று இருந்தேன். தேயிலைகளுடன் போராடிக் கொண்டு இருக்கும் எனக்கு நேரங்கள் சரியாகப் போய்விடுகிறது. அதன் பின்பு வந்த மல்லிகையில் தங்களுடைய 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதி மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பாடப் புத்தக மாக வைக்கப்பட்டிருப்பதை வாசித்தபோது எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. இந்தச் செய்தி வீரகேசரியிலும் வந்திருந்தது. இதனை யும் நான் வாசித்தேன். மல்லிகையைப் பார்க்காத பலரும் வீர கேசரியில் இந்தச் செய்தியைப் பார்த்திருப்பார்கள். இலங்கைத் தமிழன் ஒவ்வொருவருக்கும் பெரும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய செய்தி இது.

நாவலரின் நூற்றுண்டு விழாக் கொண்டாடிக் கொண்டு இருக் கும் இந்த நேரத்தில் நாவலர் போன்று இந்தியாவில் பெருமை கிட்டி இருக்கிறது உங்களுக்கு. இங்கு காங்கிரஸ் பத்திரிகையில் மிக அண்மையில் ஒரு கட்டுரை உயர்திரு முத்தையா மாஸ்டர் அவர்களால் எழுதப் பட்டிருந்தது. தமிழ் நாடு சென்று தமிழ்த் தொண்டு செய்த நாவலர், ஏன் மலைநாட்டுக்கு வந்து தொண்டு செய்யவில்லை என்று ஒரு பிரச்சனையைக் கிளப்பி இருந்தார். அது போலவே நானும் ஒரு பிரச்சனையைக் கிளப்ப வேண்டியவனாக இருக்கிறேன். நீங்கள் தமிழ்நாடு சென்று கூட்டங்களில் பேசுகிறீர் கள்; சென்னை வானொலிக்குப் பேட்டி கொடுக்கிறீர்கள். அதே சமயம் மலை நாட்டை மறந்துவிட்டீர்களே!

இதை எல்லாம் பார்க்கும் போது தாங்கள் மலை நாட்டிற்கு வந்தால் என்ன? இங்கு உங்களைக் காண ஆயிரம் இதயங்கள் ஆவ லாக இருக்கின்றனவே. உங்களின் தேசத்தில் உள்ள சில பகுதி களில் வசிக்கும் இதயங்களைப் புரிந்து கொள்ளாமல் பிற நாட்டிற் குப் போய் பெருமை பெற்றுக் கொள்வது நல்லதல்ல, எங்களிட மும் வாருங்கள்.

தாங்கள் கட்டாயம் மலைநாட்டிற்கு குறிப்பாக பதுளை, ஹட் டன், கம்பளை, நாவலப்பிட்டி, நுவரலியா போன்ற இடங்களுக்கு வரவேண்டும்.

தங்கள் சிறுகதைத் தொகுதியை தமிழகம் ஏற்றுக் கொண்டது போல் நாமும் உங்களை ஏற்றுக் கொள்ள ஆவலாக இருக்கிறோம்.

மலையகத்தில் இன்னும் பலருக்கு மல்லிகை இதழைப் பற்றித் தெரியாது. காரணம் இப்படியான இலக்கிய ஏடுகளை விற்பனவு செய்யும் புத்தகசாலைகள் இங்கு இல்லை. நீங்கள் வருவதால் இலக்கிய உணர்வு உந்துதல் பெற்ற பல இளம் நெஞ்சங்களை அணுகலாம் என நம்புகின்றேன். அந்த முறையில் இது மல்லிகைக்கு மட்டும் லாபமல்ல. ஒரு புதிய இலக்கிய ஆர்வலர்களை உருவாக்குவதற்கும் இது உந்து சக்தியாக இருக்கலாமல்லவா?

பதுளை. **கே. முத்துக்கிருஷ்ணன்**

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற

## 6 நாடகங்களின் வெளியீட்டு விழா

அவதானி

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தார் 3-11-79 அன்று 6 நாடகங்களின் வெளியீட்டு விழா ஒன்றினை நடாத்தினர். அன்றைய அனுபவம் மிகப் புதுமையானது, வெறுமனே சடங்காசாரமாக வெளியீட்டு விழாவினை நடத்தாது, நாடகத் தயாரிப்பு, ரசனை பற்றிய ஒரு ஆழமான கருத்தரங்கினைக் காலையிலும், சிறந்த இரு நாடகங்களை மாலையிலும் வைத்தமை அவர்களின் பிரக்ஞை பூர்வமான நாடக உணர்வினை எடுத்துக் காட்டியது.

இராமநாதன் மண்டபத்தின் சுவர்களில் பல போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. அழகுணர்ச்சியுடன் ஆழமான கோணங்களையும் கொண்டிருந்தன. அந்தப் போஸ்டர்களில் மாணுக்கருக்கேயுரிய, பகிடி, தீவிரம் என்பன அதிற் பளிச்சிட்டன. ஈழத்து இலக்கியத்தை வாசியுங்கள், ஈழத்து நாடகங்களை ஆதரியுங்கள் என்பன போன்ற சுவரொட்டிகள் எங்கும் தென்பட்டன. மறைந்த கவிஞர் சுபத்திரனின்,

> ஒருகோடிக் கவிதைகளால் உலகம்போற்றும்
> பெரும கவிஞன் என நாமம் பெற்றுர் அன்று
> ஒரு சொட்டு இரத்தத்தை உரிமை போரில்
> தருபவனின் புகழ் முன்னே தூசு தூசு'

என்ற கவிதை முகப்பில் ஒட்டப்பட்டிருந்தது.

ஈழத்து இலக்கிய அபிமானிகட்கும் ஆர்வலர்கட்கும் இச் சுவரொட்டிகள் பெருமகிழ்ச்சி தந்ததில் வியப்பில்லை. ஈழத்து இலக்கியப் போராட்டத்தினை யாழ். பல்கலைக் கழகம் முன்னெடுக்கும் என்றவொரு நம்பிக்கையை எனக்கு இது அளித்தது.

காலை நிகழ்ச்சிகட்கு துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தலைமை தாங்கிய மன்றத் தலைவர் திரு. சு. சிதம்பரநாதன் தமது தலைமையுரையில் ஈழத்து நாடக வரலாற்றை எடுத்தியம்பி நமது 6 நாடகங்கள் என்ற இந் நூல் தயாரிப்பாளர்களுக்கு பிரதிகள் இல்லாக் குறையை ஓரளவு நிவர்த்திக்கும் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நூல் வெளியீடு நடைபெற்றது. பேராசிரியர் சு. வித்தியானந்தன் நூலை வெளியிட்டு உரைநிகழ்த்தினுர். நூலில் மஹாகவியின் 'புதியதொரு வீடு' நா. சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு' மாவை நித்தியானந்தனின் 'ஐயா எலெக்சன் கேட்கிறுர்' குழந்தையின் 'கூடி விளையாடு பாப்பா' பௌசுல் அமீரின் 'ஏணிப்படிகள்' சிஞ்சின் 'கடலின் அக்கரை போகுவார்' (மொழிபெயர்ப்பு நாடகம்) ஆகியன இடம் பெற்றிருந்தன.

நாடகங்களை மு. நித்தியானந்தன் விமர்சித்தார். அவருடைய விமர்சனம் காரசாரமாக அமைந்தது. நூலின் அமைப்பையும், அதன் விலை மலிவையும் பாராட்டிய அவர் அதில் உள்ள ஒவ்வொரு நாடகங்களையும் தனித் தனியாக விமர்சித்தார். அவரைத் தொடர்ந்து யாழ். பல்கலைக் கழக மாணவரான திரு. கமலநாதனும் அந் நூலினை விமர்சித்தார். நூல் வெளியீட்டுக்குப் பின்னர் நடந்த கருத்தரங்கு பெறுமதியானது. ஈழத்துத் தமிழ் நாடக உலகு நாடகம் பற்றிக் காத்திரமாகச் சிந்திக்கிறது என்பதனை இக் கருத்தரங்கு காட்டியது.

கருத்தரங்கிற்குப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தலைமை தாங்கினார். கருத்தரங்கின் தலைப்பு 'நாடகத் தயாரிப்பும் ரசனையும்' என்பதாகும். பிரபல தயாரிப்பாளர்களும் ரசிகர்களும் இக்கருத்தரங்கிற் கலந்து கொண்டனர்.

தலைவர் தமது உரையில் ஈழத் தமிழ் நாடக உலகு பற்றி விஸ்தரித்து தயாரிப்பாளனுக்கும் ரசிகருக்குமிடையே ஏற்படும் தொடர்பினைச் சுட்டிக் காட்டி கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்தார். நாடகம் பற்றிய கனமான அவருடைய உரை கருத்தரங்கின் திறவுகோல் உரையாக அமைந்தது.

முதலாவதாக உரையாற்றிய திரு. சி. மௌனகுரு தமது உரையில் நாடகம் ஒரு தொடர்புச் சாதனம் என ஆரம்பித்தார். தயாரிப்பாளன் ஒரு செய்தியைப் பார்வையாளர் மீது பதிக்கிறார். அச் செய்திக்குத் தக அவர் உருவத்தைக் கையாளுகிறார். பார்வையாளருக்குத் தக, கூறப்படும் விதத்திலும் மாற்றம் ஏற்படுத்தினாலேயே செய்தி பார்வையாளரைச் சிறப்பாகச் சென்றடையும் என்று கூறி, தமது நாடகத் தயாரிப்பின் அனுபவத்தினின்று சில உதாரணங்களைக் கூறினார்.

அவரை அடுத்துப் பேசிய திரு. சண்முகலிங்கம் (குழந்தை நகைச்சுவையுடன் பல விடயங்களைக் குறிப்பிட்டார். நடிகர்கள் உணர்ச்சிவசப்படக் கூடாது எனக் குறிப்பிட்ட சண்முகலிங்கம், பார்வையாளர்களையும் உணர்ச்சிவசப் படுத்தாமல், அறிவுபெறச்) செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு பிரக்டின் நாடகத் தன்மைகளையும் குறிப்பிட்டார். இவர்கட்குப் பின்னர் பேசிய திரு. எஸ். பொன்னுத்துரை இன்றைய ஈழத் தமிழ் நாடகங்களின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிட்டார். அடுத்துப் பேசிய திரு. தாசிசியஸின் பேச்சு, திரு. நித்தியானந்தனின் காரசாரமான விமர்சனத்திற்குப் பதிலுரை கூறுவதாக அமைந்தது. அத்தோடு பார்வையாளர்களுக்கு நாம் நாடகத்தைப் படைக்கும் போது அவர்களின் ரசனைத் தரத்தினையும், தன்மையினையும் கணக்கிலெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இவரைத் தொடர்ந்து பேசிய திரு. பாலேந்திரா, தமது நாடகத் தயாரிப்பின் அனுபவங்களினடியாக, மேடையில் ஒரு நாடகத்தை எவ்வாறு கொணர்வது என விளக்கினார். அவரது நாடகத்தைத் தயாரிப்பின் போது அவருக்கெழும் பிரச்சனைகள் அவர் பேச்சில் வெளிவந்தன.

அடுத்துப் பேசிய திரு. நிர்மலா நித்தியானந்தன் அவர்கள்

உலக நாடகக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து நாடகத் தயாரிப்பையும் ரசனையையும் விளக்கினர்.

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் பிரபல நாடகத் தயாரிப்பாளர்களும், எழுத்தாளர்களுமாவர். ஈழத் தமிழ் நாடக உலகில் இன்று எரியும் பிரச்சனையாக இருப்பது தமிழ் நாடகங்கள் வளர்ந்துள்ளதா? இல்லையா? என்ற கேள்வியே. மொழி பெயர்ப்பு நாடகங்கள் இப்போது எமக்கு அவசியமா? இல்லையா? என்ற கேள்வியே.

உலக நாடக மரபுக்கு ஏற்ப நம்மை வளர்க்க வேண்டுமா? நம்து நாடக் மரபுக்கு ஏற்ப நம்மை வளர்க்க வேண்டுமா? என்ற கேள்வியே. அன்றைய கருத்தரங்கில் இப் பிரச்சனைகள் காரசாரமாக அலசப்பட்டன. என்னருகில் இருந்த ஒரு நண்பர் இக் கருத்தரங்கு இரு முகாம்களுக்கிடையில் நடைபெறும் சண்டை போலத் தோன்றுகின்றது என்று என்னிடம் குறிப்பிட்டபோது எனக்கு ஈழத் தமிழ் நாடக உலகின் இறைய நிலையே ஞாபகத்திற்கு வந்தது. காரசாரமாகக் கருத்தரங்கு அமைந்திருந்தாலும் அனைவரும் நமது மரபு, கூத்துமரபே என்று ஒப்புக் கொண்டு பேசியமையும் அதிலிருந்துதான் நமது நாடக மரபு கிளைக்க வேண்டும் என்று அடிக்கடி குறிப்பிட்டமையும் நமக்கு நம்பிக்கை தருவதாக இருந்தது.

முரண்பாடுகள் அவசியமானவை. முரண்பாடுகளின் மோதலில் தான் வளர்ச்சி உருவாக முடியும். அவ் வளர்ச்சி சரியான திசைக் குத் திரும்புகிறது, திரும்பும் என்பதனை அனைவரும் கூத்து மரபினைத் தமது மரபாக ஒத்துக் கொண்டமை எனக்குப் புலப்படுத்தியது.

இறுதியில் முடிவுரை வழங்கிய பேராசிரியர் கா. சிவத்தம்பியும் இதனையே குறிப்பிட்டார். தமிழ் நாடகம் பற்றி இன்னும் காத்திரமாகச் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறோம். இந்தச் சிந்தனை நமது வளர்ச்சிக்கு நாம் போடும் அத்திவாரமே என அழகாகக் கூறித் தமது உரையை முடித்தார்.

காலையில் கருத்தரங்கு நடாத்திய இலக்கிய மன்றத்தினர் மாலையில் இரண்டு நாடகங்களை மேடையேற்றினர். கலாநிதி அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சி. மௌனகுருவின் தயாரிப்பில் உருவான மஹாகவியின் 'புதியதொரு வீடு' நிர்மலா நித்தியானந்தன் மொழிபெயர்த்து கமலநாதன் தயாரித்த யூஜன் அயனேஸ்கோவின் 'இடைவெளிகள்' என்னும் அபத்த நாடகமும் மேடையேறின. இவ்விரு நாடகங்களிலும பல்கலைக் கழக மாணுக்கரே பங்கு கொண்டனர்.

ஈழத்து நாடக வரலாற்றில் தமிழ் இலக்கிய மன்றத்தின் பணி குறிப்பிடத்தக்கது. ஈழத்தில் பிரபல நாடகாசிரியர்களின் நாடகங்களை ஒன்று சேரப் புத்தக வடிவத்தில் கொனர்ந்தமைக்கும், காத்திரமான ஒரு கருத்தரங்கினை நடாத்தியமைக்கும், சிறப்பான நாடகங்களை மேடையேற்றியமைக்குமாக நாங்கள் இவர்களை எத்தனை பாராட்டினுலும் தகும்.

ஈழத்து இலக்கிய உணர்வுடன் வளரும் இவர்களே நமது எதிர் கால நம்பிக்கைகளாகும்.

கேள்விகள் புதுமையாக இருக்கட்டும்.— தரமானவையாக அவை அமையட்டும். உங்களது கேள்வியின் பசீன எமது பதிலுக்கு உற்சாகமூட்டட்டும்.

# தூண்டில்



டொமினிக் ஜீவா

❉ கலாநிதி கா. சிவத்தம்பியை எப்பொழுது எங்கே — சந்தித்தீர்கள்? அவரைப் பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?

வசாவிளான். **க. தவயோகம்**

பல்கலைக் கழக மாணவனுக அவர் இருந்த காலத்தில் — சுமார் இருபது வருடங்களுக்கு முன்— யாழ்ப்பாண நகர மண்டபத்தில் ஒரு நாடகம் நடைபெற்றது. அதில் அவர் நடிக்க வந்திருந்தார் நான் பார்க்கப் போயிருந்தேன். முன்னரே நான் அவரைப் பற்றியும், அவர் என்னைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தது எங்களது அறிமுகத்தைச் சுலபமாக்கியது. இதுவே எங்களது முதல் சந்திப்பு.

சிவத்தம்பி அவர்களுடன் நான் எந்தக் காலத்திலுமே அவரொரு கலாநிதி என்ற முறையில் பழகுவதில்லை; தொடர்பு கொள்வதுமில்லை. அவர் ஒரு நட்புக்குச் சிறந்த உள்ளம் என்ற தோரணையிலேயே நட்பு வைத்திருக்கின்றேன். பல பொது மேடைகளில் அவரை மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசி இருக்கின்றேன். கருத்தில் மிக வலிமையாக நின்று எதிர்த்திருக்கிறேன். தனி மனிதத் தாக்குதலல்ல• அதே சமயம் வார்த்தைகளில் எனக்கே உரித்தான கடுமை இழையோடியிருக்கும். இருந்தும் அந்த 'மனிதன்' என்னிடம் பகைமை பாராட்டியதில்லை. மிகக் குழந்தைச் சுபாவமுள்ள பிறவி. அப்பழுக்கற்ற அருமையான நெஞ்சி. எங்கள் இருவருக்குமிடையே ஓர் ஒற்றுமையும் உண்டு. நான் பல சிரமங்களுக்கும் சமூக நிலைப்பாடுகளுக்கும் ஈடுகொடுத்து உழைத்து முன்னேறியது போலவே அவரும் பல கஷ்ட நஷ்டங்களுக்கு மத்தியில் தன்னை உருவாக்கிக் கொண்டவர். இதனுல் தனிப்பட்ட முறையில் அவர்மீது எனக்குத் தனிமதிப்பு; மரியாதை.

❉ இந்தியப் பயணத்தின்போது திரு. நா. பார்த்தசாரதியைச் சந்தித்தீர்களா? உங்களிடையே உரையாடல்கள் எந்த ரீதியில் இருந்தன?

கைதடி. **ச. முருகானந்தன்**

'தீபம்' காரியாலயத்திலும் அவரைச் சந்தித்தேன். உடன், தி. க. சி., ரவீந்திரதாஸ் வந்திருந்தனர். தினமணிக்கதிரில் ஆசிரியர் பதவியேற்று ஒரு வாரமிருக்கும். தீபத்தின் எதிர்காலத்தைப் பற்றியே பெரும்பாலும் எனது கருத்து இருந்தது. அவர் தனது கஷ்டங்களையும் தீபத்தினுல் தனக்கேற்பட்டுள்ள பொருளாதார முடையைப் பற்றியும் சொன்னுர். நானும் ஒரு சிரமதசையில் உள்ள பத்திரிகையாளன் தான். எனக்கென்னமோ அவர் சொன்ன சமாதானங்கள் மனதில் சரியென்று படவில்லை.

இந்த ஆசிரிய மாற்றங்களுக்குப் பின்னுல் ஓர் அரசியல் பின்

னணி இருப்பதாக நான் ஊகிக்கின்றேன். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிறுவனத் தலைமை மாறி விட்டது. அந்தத் தலைமை ஆர். எஸ். எஸ். என்ற வகுப்புவாத ஸ்தாபனத்திற்குச் சாதகமாக இயங்க முடிவு செய்துள்ளதாக அறிகிறேன். இந்த ஆர். எஸ். எஸ். நிறுவனம் காந்தி அடிகளின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகத் தடுக்கப்பட்டிருந்தது வரலாறு. தமிழ் நாட்டில் இது வேரூன்ற முயற்சித்து வருகின்றது. பச்சை வகுப்புவாத ஸ்தாபனம். இதற்குப் பிரசாரத்திற்குப் பத்திரிகைப் பலம் தேவை. 'துக்ளக்' ஓரளவு இதைச் செய்து வருகிறது. கடைகெட்ட பிற்போக்குக் கும்பலின் ஊதுகுழலான 'சோ' முதல் பிரசாரகன். அடுத்து ஓர் ஆள் தேவை. நா. பா. அந்த இடத்தை நிரப்பப் பயன்பட்டுள்ளார். வகுப்புவாதத்தின் நச்சு வேர்களைப் பரப்ப எழுத்தாளன் பயன்படுத்தப் படுகிறான். இந்த இருவரிடமும் தமிழகப் படைப்பாளிகள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

❈ சமீபத்தில் கலைமகள் இதழில் வெளிவந்து பரிசு பெற்ற மலர் மன்னனின் 'கடைசி பஸ்' குறுநாவலைப் படித்தீர்களா? அதைப்பற்றிய உங்களது கருத்து என்ன?

கொழும்பு - 13. **ஸ்ரீயாசகன்**

படிக்கவில்லை. யாரும் அது பற்றிச் சொல்லவுமில்லை. சந்தர்ப்பம் கிடைத்து அக் கதையும் கிடைத்துப் படிக்க நேர்ந்தால் வேறொரு சந்தர்ப்பத்தில் அது பற்றி எனது கருத்துக்களைச் சொல்லுகின்றேன்.

❈ இலக்கிய ரசனையும் அனுபவமும் படிப்பினையும் மிக்க உங்களது தமிழக அனுபவம் பற்றிய கட்டுரைத் தொடரை வரைய ஏன் மறுக்கிறீர்கள்? அவசியம் தொடர்ந்து எழுதுங்கள், எழுதுவீர்களா?

அரியாலை. **சி. ஏச். பிரேமினி**

எழுதுவதில்லை என்றே முடிவெடுத்து விட்டேன். ஓர் ஆர்வ உந்துதலைப் பார்த்தீர்களா? நான் எழுதுவதில்லை என அறிவித்த பின்னரும் இவ்வளவு ஆர்வத்துடன் உங்களைப் போன்றவர்களைக் கேட்க வைத்துள்ளதல்லவா! அது பிரயாணக் கட்டுரைக்கு வெற்றி. நான் மணியன் அல்ல.

❈ ஈரான் மாணவர்களின் 'பயணக் கைதிகள்' செயல்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

**ந. முரளிகிருஷ்ணன்**

யாழ்ப்பாணம்.

தூதுவராலய ஊழியர்களைப் பயணக் கைதிகளாகச் சிறைப் பிடித்து வைத்திருப்பதை நமது பண்டைய ராஜதந்திர மரபுகளே கண்டிக்கின்றன. அதே சமயம் அமெரிக்கா செய்த அயோக்கியத் தனங்களைச் சிலர் மூடி மறைக்கப் பார்க்கின்றனரே! பயணக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தவறென்றால், பஞ்சமா பாதகன், கொலைகாரன், மக்களின் சொத்துக்களை திருடி அமெரிக்க வங்கிகளில் தனது சொத்தாகப் போட்டு வைத்திருக்கும் சர்வ தேசக் குற்றவாளி என ஈரானியர்களால் குற்றம் சாட்டப்படும் ஷாவுக்குத் தஞ்சமளித்து அவனுக்கு ராஜ மரியாதை கொடுத்துக் கௌரவமளித்துக் கனம் பண்ணும் அமெரிக்க அரசாங்கத்தின் செயல் எத்தனை பெரிய அநியாயம். எனவே இரண்டு செயல்களையும் சீர்தூக்கிப் பார்த்துக் கருத்துச் சொல்ல வேண்டும்.

சமீபத்தில் 'மான்செஸ்டர் கார்டியன்' ஒரு கட்டுரையைப்

பிரசுரித்துள்ளது. அது நம்து பத்திரிகைகளில் இதுவரையும் வராத செய்தி. ஷா அமெரிக்காவுக்கு வருவதற்கு முன்னரே சில அமெரிக்க உயர் அதிகாரிகள் ஈரான் வந்து பஸார்கானிடம் பேச்சு வார்த்தை நடத்தினர்களாம், ஷாவை அமெரிக்காவுக்கு அழைப்பதற்கு பிரதமர் பஸார்கான் மறுதலித்து விட்டார். பின்னர் ஷாவின் நோயைக் காரணமாகக் காட்டி வற்புறுத்தினர்களாம். அப்படியானல் மெடிகல் ரிப்போட்டைப் பார்ப்பதற்கும், அவருக்கு உண்மையில் நோய் தானு இல்லையா என்பதை அத்தாட்சிப் படுத்துவதற்கும் அமெரிக்காவில் உள்ள இரு ஈரானிய டாக்டர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டால் — அந்த டாக்டர்கள் நோய்தான் என ருசுப்படுத்தினல் — அமெரிக்காவுக்கு அழைக்கத் தங்களுக்கு ஆட்சேபமில்லை என பஸார்கான் சொன்னுராம். அதைக் கொள்கை அடிப்படையில் ஒப்புக் கொண்டு சென்ற அந்த உயர் அதிகாரிகள் அதன் பின் ஈரானிய அரசுடன் தொடர்பே கொள்ளாமல் தானடித்த மூப்பாக ஷாவை அமெரிக்காவுக்கு அழைத்து வந்து விட்டனர்.

ஷாவுக்கு நோய் என்பதை ஈரானிய மக்கள் அறவே நம்பத் தயாராக இல்லை. வினை விதைத்தவன் வினை அறுக்கிருன்.

❉ சிறந்த எழுத்தாளரான கண்ணதாசன் மதுபானம் அதிகமாக அருந்துகிருர். எழுத்தாளர்களில் ஒருவரான நீங்கள் ஏன் மதுபானம் அருந்துவதில்லை?

நயினுதீவு. **நயினையூர்ச் சிவம்**

ஒருவேளை நான் இன்னமும் பிரபல எழுத்தாளன் ஆகாமலிருக்கலாம். எப்போவோ ஒரு காலத்தில் என்னைத் தன் வனசாரக் காதலித்த பெண்ணுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் இதுவும் ஒன்ருக இருக்கலாம், மனோதத்துவ ரீதியில் இந்த மதுபான மறுத்தலை யோசித்துச் சொல்லப் போனுல் எனது அப்பன் ஒரு பச்சைக் குடிகாரன்! எனது உயர் கல்விக்கான சந்தர்ப்பத்தை நாசமாக்கியது இந்த மதுபானந்தான். ஜெயகாந்தனுடன் இது சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தேன், இந்த நிறை. அவர் 'ஞான நிலை' யில் இருந்த போது என்னையும் தன்னுடன் பங்கு கொள்ளக் கேட்டார். நான் மறுத்தேன். 'இதுகளைப் பாவிக்காமல் நீயென்னப்பா எழுத்தாளன்!' எனக் கேட்டார். குழந்தை மனத் தமும் புகளைச் சொன்னேன். 'என்னுடைய தகப்பன் குடி என்ருலே எட்ட நிற்பவர். ஆயிரம் ரூபாப் பணத்தைத் தர முனையும் குடிகாரனிடம் நாளைக்குக் கொண்டு தா' எனச் சொல்லி ஒட்டம் பிடிப்பவர். அப்படியானவருக்கு இப்படியொரு பிள்ளை. இப்படியான உங்களுக்கு அப்படியொரு தகப்பன்' என்ருர்.

❉ இப்போது ஏன் அனுபவங்கள் பேசுவதில்லை?

**ந. முரளிகிருஷ்ணன்**
யாழ்ப்பாணம்.

தூண்டிலை ஒழுங்காகப் படித்து வந்தால் இந்தக் கேள்வியைக் கேட்க மாட்டீர்கள். எனது சகல அனுபவங்களையும் பல உருவங்களில் மல்லிகை ரஸிகர்களுடன் பகிர்ந்து வருபவன் நான். அது அனுபவ முத்திரைகளில் தான் வெளிவரும் என்பதில்லை: நான் எழுதும் ஒவ்வொரு எழுத்திலுமே எனது அனுபவங்கள் முத்திரையாகும். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல, உருவங்கள் மாறுகின்றன.

❉ தமிழகம் சென்றிருந்தீர்களே தரும் அருப் சிவராமைச் சந்தித்தீர்களா?

திருமலே. டே. அற்புதன்

அவரைச் சந்திக்க வேண்டுமென நான் சென்னையில் தங்கியிருந்த போது முயன்று பார்த்தேன். மதுரையில் இருப்பதாகத் தகவல் சொன்னுர்கள். மதுரையில் விசாரித்த பொழுது மூன்று மாதங்கள் மதுரையில் தங்கி இருந்துவிட்டுச் சென்று விட்டதாகவும் சொன்னுர்கள். எனவே அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லே.

❉ ஜெயகாந்தன் வருகிருர்..... வருகிருர்...... என நீங்களே பலதடவை மல்லிகையில் அறிவித்திருந்தீர்களே, இன்னமும் அவர் வரவில்லேயே: அவர் வருவாரா, மாட்டாரா?

மானிப்பாய். க. சிவலிங்கம்

சென்னையில் 'கல்பனு' வெளியீட்டாளர் குழுக் கூட்டம் நடைபெற்றது. என்னையும் விசேஷ ஆலோசனையாளனுக அழைத்திருந்தனர். அங்கு அறந்தை நாராயணன், ஜெயகாந்தன், கிருஷ்ணையா, ஹுசேய்ன் போன்ருேர் வந்திருந்தனர். 'கல்பனு' ஆசிரியர் என்ற முறையிலும் எழுத்தர்ளர் என்கின்ற ரீதியிலும் இலங்கைக்கு ஜெயகாந்தன் வருவது சம்பந்தமாகக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. என்னிடமும் கருத்துக் கேட்கப்பட்டது. 'பல தடவைகள் ஜெயகாந்தன் இலங்கைக்கு வருகிருர், வருகிருர் எனச் சொல்லிச் சொல்லி அவர் வராமலே இருந்து விட்டார். எனவே அவரது வருகையில் எனக்கு நம்பிக்கை அற்றுப் போய் விட்டது. எனவே ஜெயகாந்தன் வருகையை இட்டு என்னுல் ஒன்றும் சொல்ல இயலாது' என்றேன். என். ஸி. பி. எச்.— நிறுவன மனேஜரும் கல்பனு வெளியீட்டு அமைப்பின் முக்கிய உறுப்பினருமான ஹுசேய்ன் அவர்கள் தானும் நண்பர் ஜெயகாந்தனும் 80 பிப்ரவரியில் கண்டிப்பாக இலங்கை வருவதாகவும் இங்குள்ள ஒழுங்கமைப்புக்கு என்னை முழுப் பொறுப்பேற்க வேண்டுமெனவும் உறுதி தந்தார். ஹுசேய்னின் உறுதியை நான் நம்புபவன். ஜெயகாந்தன் ஜனவரியில் மாஸ்கோ போகின்ருர். அதன் பின் கண்டிப்பாக இலங்கை வருவார்.

❉ மல்லிகையைப் பொறுத்த வரை உங்களது எதிர்கால அபிலாஷை என்ன?

மாத்தகல். ஆர். பி. மணியன்

முழுத் தேசத்திலுமுள்ள ஆரோக்கியமான சிந்தனை நிரம்பிய சகல எழுத்தாளர்களேயும் ஒருங்கிணைத்து எழுத வைத்து மல்லிகையில் வெளியிட வேண்டும். அதற்கு மாத இதழ் இடம் தர முடியாத படியால் வார இதழாக மல்லிகையை வளர்ச்சிப்படுத்த வேண்டும் என்பதே எனது பேராவலாகும்.

❉ தலேமன்னர் — ராமேஸ்வரம் கப்பல் பிரயாணம் எப்படி இருந்தது?

ஊரெழு. ம. மாணிக்கராசா

மகா சிரமம். நம்மைப் போல இலக்கிய உறவுகளே நாடிப் போகின்ற பொறுப்பான இலக்கியத் தூதுவர்களுக்கு கௌரவமாகப் போய் வர இரண்டு அரசாங்கங்களும் ஏதாவது தகுந்த ஏற்பாடுகளேச் செய்து தரவேண்டும். அதனுல் இரண்டு நாடுகளின் நட்புறவுக்குமே நல்லது. நடப்பது அப்படியல்ல. எத்தனேயோ கஷ்டங்களேத் தாண்டித் தான் இக்கரைக்கும் அக்கரைக்குப் போக வர வேண்டியுள்ளது.

மேன்மை

சுவை

தரமானவைகளுக்கு

- பேக்கிங் பவுடர்
- ஜெலி கிறிஸ்டல்
- கஸ்ரர்ட் பவுடர்

போன்றவைகளுக்கு

எமது முத்திரை

பதிக்கப்பட்டவைகளையே

தேர்ந்தெடுத்து

வாங்குங்கள்.

தயாரிப்பாளர்:

BIRD INDUSTRIES

294,

ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை,

கொழும்பு—13.

அன்பளிப்பு

கொழும்பு றெஸ்ரோரன்ஸ்

77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**Mallikai** NOVEMBER 1979

Registered as a Newspaper in Sri Lanka

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- National
- Sanyo
- Sony

போன்ற

ஜப்பான், சுவிஸ் நாட்டு

தரமான

- றேடியோ
- கஸற் றேடியோ
- ரேப் ரெக்கோட்டர்

- *Mondia, Garuda, Omax, Seiko, Citizen,*
- கைக் கடிகாரங்களுக்கும், சுவர் மணிக்கூடுகள்,
- *Iron Box, Cassette Tape, Fan* போன்ற
- வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களும்
- ஒரு வருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளத் தொடர்புகொள்ள

யாழ்ப்பாணத்தில்

தலைசிறந்த ஸ்தாபனம்

# Malayan Radio Service

48, KASTHURIAR ROAD,

JAFFNA.

இப்பத்திரிகை 234B, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும் ஆசிரியரும் வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களால் மல்லிகை சாதனங்களுடன் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும் அட்டை யா. மா. ப. நோ. கூ. ச. கூட்டுறவு அச்சகத்திலும் அச்சிடப்பெற்றது.